26 வது ஆண்டுவிழாவை முன்னிட்டு
அரிச்சலார்
28-6-65 முதல்
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்

Registered at the G. P. O. as a Newspaper
வாரப்பதிப்பு விலை சதம் 15

# ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 143
தேசிய தினசரி National Tamil Daily
விசுவாவசு ஆனி 20 ரபி அவ் பிறை 4 (4-7-65) ஞாயிறு

தினமும் பாவியுங்கள்


மில்க் வைற்
நீல சோப்
ஒரு கட்டியின் விலை சதம் =/20.

# 'கத்தோலிக்க திருச்சபைக்கு மொழிப்பிரச்னை கிடையாது
## சிங்களவர் தமிழையும் தமிழர் சிங்களமும் கற்கவேண்டும்'
### யாழ்ப்பாணத்தில் கருதினல் கூறே

யாழ்ப்பாணம், ஞாயிறு

**இலங்கையில் இரண்டு மொழிகள் மட்டுமே பேசப்படுவதலுல் மக்கள் ஒற்றுமையாக இருந்து நாட்டின் முன்னேற்றத்தைக்கருதி உழைக்க எவ்வித கஷ்டமும் இருக்கநியாயமில்லை என்று யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நேற்றுமாலை தமக்களிக்கப்பட்ட வரவேற்பில் மகா வந்தனைக்குரிய கருதினல் தோமஸ் கூறே கூறினர்.**

**மாநகரசபை முதல்வராலும். அங்கத்தவர்களாலும் அளிக்கப்பட்ட வரவேற்பிற்கு மாநகரசபை மேயர் திரு. எஸ். சி. மகாதேவா தலைமை வகித்தார்**

மகாவந்தனைக்குரிய கருதினல் தோமஸ் கூறே அவர்களுக்கு, யாழ். நகர சபை மேயர் வரவேற்புப்பத்திரம் வாசித்தளித்தார்.

மகாவந். கருதினல் கூறே தொடர்ந்து கூறியதாவது: சுவிட்சர்லாந்தில், மூன்று மொழிகள் பேசப்பட்டும், மொழிப்பிரச்னை எப்பொழுதாவது அங்கு எழுந்ததுகிடையாது. ஏனெனில் அவர்கள் நாட்டிற்காக உழைப்பதிலேயே கருத்து கொண்டுள்ளனர். நாட்டு மக்களின் முன்னேற்றம் கருதி சிங்கள மக்கள் தமிழ் மொழியையும், தமிழ் மக்கள் சிங்கள மொழியையும் கற்று, எவ்வித வித்தியாசமுமின்றி நல்லெண்ணத்துடன் வாழவழியுண்டு.

சுவிட்சர்லாந்தில், இத்தாலி, பிராஞ்சு ஜெர்மனி ஆகிய மொழிகள் பேசப்படுகிறது. அப்படியிருந்தும் அவர்களுக்கிடையே சச்சரவு தோன்றுவதில்லை. அங்கு ஒவ்வொருவரும் மற்றவர்களின் மொழிகளையும் பேசக்கூடியவர்களாகவும், புரிந்துகொள்ளக் கூடியவர்களாகவும் இருக்கின்றனர்கள்.

எமது கத்தோலிக்க திருச்சபையைப் பொறுத்தவரையில், மொழி எப்பொழுதாவது எமக்கொரு பிரச்னையாக இருந்ததில்லை. நீர்கொழும்பு, சிலாபம் பகுதிகளில் உள்ளவர்கள் தமிழ், சிங்களம் ஆகிய இருமொழிகளையும் படிக்கிறர்கள்; பேசுகிறர்கள். அவர்களுக்குள் உள்ள நல்லெண்ணத்தைக் கொண்டு இவ்விதமாக அவர்கள் படிக்கிறர்களேயொழிய, எவ்வித வற்புறுத்தலும் இருந்தது கிடையாது.

வடபகுதியிலுள்ள மடு தேவாலயத்தில் சிங்களம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் பூசையும் நடைபெறுவதோடு, இருமொழிகளையும் பேசிக்கொள்கிறர்கள். எந்தக்காலத்திலும் அங்கு மொழிப்பிரச்னை இருந்ததில்லை.

தற்பொழுது நல்லெண்ணத்தின் அறிகுறிகள் நாட்டின் பல பாகங்களிலும் இருப்பதாகத் தெரிகிறது. இந்த நல்லெண்ணம், வளர்ச்சிபெற்று, அதன் பலனுக சுமுகமான நிலைமை தோன்றி மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு நாம் எல்லோரும் ஒத்துழைக்கவேண்டும்.

நான் அறியக்கூடியளவில், வடபகுதியிலுள்ள கத்தோலிக்க மக்கள் ஏனைய மக்களுடன், சகோதரத்துவ மனப்பான்மையுடன் வாழ்ந்து வருகிறர்கள்.

இலங்கை ஒரு அழகான நாடென்றும், இங்குள்ளவர்கள், அன்பாகவும், கண்ணியத்தோடும், நடந்து கொள்வார்களென்றும், அன்பாக எல்லாரையும் வரவேற்பார்களென்றும் பலர் என்னிடம்கூறியுள்ளார்கள். இலங்கை மக்களைப்பற்றி பிறநாட்டவர்கள் நல்ல அபிப்பிராயத்தை மேலும் மேலும் வளர்க்க கூடியதாக நாம் எல்லோரும் உழைக்க வேண்டும்.

சமூக நல்வாழ்விற்காக மக்களிடையே சமாதானம் நிலவ மேயரும் அங்கத்

(10-ம் பக்கம் பார்க்க)

## நல்லூர் சிவன் கோவில்
### ஆனி உத்தர தரிசன உற்சவம்

நாளை திங்கட்கிழமை உதயத்தின் முன் 3 மணியளவில் ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாளுக்கும் ஸ்ரீ நடராஜ மூர்த்திக்கும் 108 சங்காபிஷேகமும், காலை 5-30 மணிக்கு தரிசனமும், 6 மணிக்கு உற்சவமும் நடைபெறும்.

பாத்திரங்கள் வாங்கும் பொழுது
டொலர் மார்க் என்றே கேளுங்கள்
பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்


டொலர் கோர்ப்பரேஷன்
14. டாம் வீதி கொழும்பு
உற்பத்தியாளர்கள்:
அலுமினிய தொழிற்சாலை
மாவிட்டபுரம்.

# மின்சாரத்தால் தாக்குண்டு மரணமானர்
### யாழ். மின்சார சிர்கேட்டுக்கு மரணவிசாரணை அதிகாரிகண்டனம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நாவாந்துறை சென் மேரிஸ் தேவாலய வளவிற்குள் அதிகாலையில் மின்சாரத்தால் தாக்குண்டு ஒருவர் மரணமானர். மின்சாரத்தால் தாக்குண்ட மற்றொருவர் மயக்கமடைந்தார்.

மின்சாரத்தால் தாக்குண்டு மரணமான சுளிபுரத்தை சேர்ந்த ஆழ்வான் முருகன் (வயது 50) என்பவரின் மரணம் பற்றி யாழ்ப்பாணம் மரண விசாரணை அதிகாரி திரு. ஏ. அமிர்தலிங்கம் மரண விசாரணை செய்தார்.

சென்மேரிஸ் சேர்ச் வண. பிதா கரவ் சாட்சியமளித்தபோது. அதிகாலை 5-30 மணிக்கு லைட் அணைந்திருந்ததாகவும் 'ஐயோ ஐயோ' என்ற சத்தம் கேட்டதாகவும், மனுவல் என்பவர் ஓடிவந்து ஒருவர் மின்சாரத்தால் தாக்குண்டு மயக்கமடைந்திருப்பதாக கூறியதாகவும், மின்சார வயரை தடியால் தட்டிவிட்டு மயக்கமடைந்தவரை ஆஸ்பத்திரிக்கு அனுப்பியதாகவும் கூறினர்.

மலிச்சியாஸ் என்பவர் சாட்சியமளித்தபோது, சத்தம்கேட்டுத் தான் சென்றதாகவும், தன்னையும் மின்சாரம் தாக்கியதாகவும், தனது வீட்டில் தான் மீண்டும் அறிவு வந்ததாகவும் கூறினர்.

யாழ்ப்பாண மாநகரசபை அங்கத்தவர் திரு. ஏ. ஜி. ராஜசூரியர் தானும் சாட்சியமளிக்க விரும்புவதாக மரண விசாரணை அதிகாரியிடம் தெரிவித்துக் கூறியதாவது: நான் மின்சார கமிட்டித்தலைவராக இருக்கிறேன். யாழ்ப்பாணத்தில் மின்சார இணைப்புகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. இதுபற்றி பல

(10ம் பக்கம் பார்க்க)

## இன்று

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் கொடியேற்றம். திருவிழா 25 நாட்கள் நடைபெறும். பஞ்சரத தேர்த்திருவிழா இம்மாதம் 27-ம் திகதி நடைபெறும். தீர்த்தம் 28-ம் திகதி.

ஃ ஃ ஃ

நீர்வேலி கந்தசுவாமி கோவில ஆனி உத்தர திருமஞ்சனவிழா. இவ்விழாவை முன்னிட்டு கதாப்பிரசங்கம் உட்பட இன்னிசைக்கச்சேரிகளும் நடைபெறும்.

ஃ ஃ ஃ

கரவெட்டிமேற்கு மத்தொளி முங்கோடை முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவ சிறப்பு மலர் வெளியீட்டு விழா ஆலய முன்றலில் இன்று உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறும். பல சைவப் பெரியார்கள் சமயக் கருத்துரைகள் வழங்குவர்.

## பிரதமரின் வாழ்த்துச் செய்தி

பம்பலப்பிட்டி, ஞாயிறு

இன்று கொண்டாடப்படும் அமெரிக்க தேசிய தினத்தை முன்னிட்டு அமெரிக்க ஜனதிபதி திரு. ஜோன்சனுக்கு பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா நலவாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பியுள்ளார்.

## மந்திரிக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

பண்டத்தரிப்பு கோவிற்பற்று கிராமச்சபை இன்று மந்திரி திரு. எம். திருச்செல்வத்துக்குஒருவரவேற்பு அளிக்கும். பாராட்டு விழா கிராமசங்கத் தலைவர் திருமதி பேளி அத்தனுசியார் தலைமையில நடைபெறும்.

இந்தியா-பாகிஸ்தான்-சீன

# கௌரவமான முறையில் உடன்பாடு ஏற்படவேண்டும்
### சேலத்தில் இந்திய ராஷ்டிரபதி

புதுடில்லி, ஜூன் 3

கம்யூனிஸ்ட் சீன, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் இந்தியா கண்ணியமான, கௌரவமான அடிப்படையில் உடன்பாட்டுக்கு வரவேண்டியது மிகவும் அவசியம் என்று இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சேலத்தில், சேலம் நகர சபை நேற்று அளித்த வரவேற்பின்போது பேசுகையில் தான் ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் மேற்கண்டவாறு கூறினர்,

அவர் அப்பொழுது தொடர்ந்து பேசுகையில், பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 900 கோடி ரூபாய் செலவிடப் படுகிறதென்றும் இப்படியான அண்டை நாடுகளுடன் சிநேக உறவு கொண்டால் இப் பெருந்தொகைப் பணத்தை உள்நாட்டு பொருளாதார முன்னேற்றத்துக்குப் பயன்படுத்தலாம் என்றும் கூறினர். இந்தியா, பாகிஸ்தான், சீன ஆகிய நாடுகளிடையே இணக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் இந்த நாடுகளின் பொருளாதாரம் வளர்ச்சி அடையமுடிவதுடன் உலக அமைதிக்கும் ஆபத்துவருவதையும் கூட்டாகத் தவிர்க்கலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# உங்கள் இராசி பலன்

எழுதுவது

சோதிட ஆசான் செ. தெல்லியூர்

Colombo Studio

[ விசுவாவசு ஆனிமீ 20ஞாயிறு (4-7-65) முதல் 26 சனி (10-7-65) வரையுள்ள உங்கள் பலன்கள் ]

**மேட இராசி**

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் செய்தொழிலால் இலாபம் கிட்டுதல், எதிரிகள் சரணடைதல், நல்லோர் சேர்க்கையால் நற்பலன் விளைதல், அதிகாரிகள் உதவிகள் கிடைத்தல், மதிப்புப் பெருகுதல், குடும்பத்தில் சுபகரும கொண்டாட்டங்கள் நடத்தல், தேகாரோக்கியச் சிறப்புண்டாதல், குடும்பத்தில் சுமுகமான சூழல் ஏற்படல், இனபந்துக்கள்சேர்க்கை-கொண்டாட்டம், கமத்தொழில் இலாபம் தரல், வர்த்தகம் சிறப்படைதல், விருத்திக்கான வழிவகைகள் கிட்டல், உத்தியோகத்துறை உயர்வுண்டாதல், பணவரவு, பெண்களுக்கு சமூகம்-கல்வி தொழில் மேன்மையடைதல், களத்திரபுத்திரசுகம் கிடைத்தல் ஆதியனகாணப் படுகின்றன.

**இடப இராசி**

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் பெரியோரால் ஆபத்துக் காலங்களில்உதவி கிடைத்தல், செய்தொழில்கள் பெருமளவில் இலாபம் தருதல், குடும்பத்தில் அமைதிகாணல், குழந்தைகள்-துணைவருக்கு ஆரோக்கியக் குறைவு உண்டாதல், வைத்தியச்செலவு, எதிரிகள் அழிவு, பண நிலைமையில் அபிவிருத்தி, மதிப்பு அதிகரித்தல், கமத்தொழில் பலிதம், வர்த்தகம் சீரான பாதையில் செல்லல், பழைய கடன்கள் வரவு, உத்தியோகத் துறையில் சிறப்பு, அதிகாரிகள் ஆதரவு, பெண்களுக்கு குடும்பசுகக்குறைவு, தேகாரோக்கியம் குன்றல், ஏமாற்றம், அவதூறு ஆதிய பலன்கள் காணப்படுகின்றன.

**மிதுன இராசி**

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் செய்தொழிற் சிறப்பு, பொருள் வரவு, கடன் வகையறு வசூலாதல், சமூகத்தில் மதிப்புவளர்ச்சி, சுபகருமங்கள் குடும்பத்தில் நடத்தல், எதிரிகள் மனம் மாறு உதவுதல், கமத்தொழில் பயன்தரல், வர்த்தகம் மத்திமபலன் தருதல், தொழில் விருத்தியாக்க வசதி கிடைத்தல், கடன் வரவு, பரீட்சைகளில் மாணவருக்கு நன்மை, உத்தியோகத்தருக்கு பல விதவசதிகளும் கிட்டல், அதிகாரிகள் மனம்மாறி ஆதரித்தல், பொருள்வரவு, பெண்களுக்கு நல்லோர் சேர்க்கை, சமூகத்தில் செல்வாக்குயர்ச்சி, காதல் விவகாரத்தில் ஈடுபடல், ஏமாற்றம் ஏற்படல், அவமானம் அடைதல் ஆதியன காணப்படுகின்றன.

**கடக இராசி**

இவ்விராசியாளருக்கு இவ் வாரம் குடும்பத்தில் சிறிதளவு அமைதி காணல், கடன் தொல்லைகள், பெருமளவில், பெரியோர் உதவி, தேகாரோக்கியம் ஏற்படல், செய்தொழில் நலன்தருதல், அடிக்கடி வெளியூர்ப் பிரயாணங்கள் ஏற்படல், இனபந்துக்களால் உள்ள தொல்லைகளும் குறைவடைதல், மாணவருக்கு பரீட்சையில் வெற்றி, கல்விச்சிறப்புண்டாதல், கமத்தொழில் பலன் தருதல், உத்தியோகத்துறையில் உயர்வுண்டாதல், பணியாளர் உதவி கிடைத்தல், வர்த்தகப் பலன்தருதல், பெண்களுக்கு குடும்பச் சிறப்பு, தேகாரோக்கியம், பொருள் வரவு, சமூக மதிப்பு, களத்திர

(4-ம் பக்கம் பார்க்க)


## வரி விளம்பரம்

**கல்வி**

ஆங்கிலம் / தமிழ் தட்டியல், சுருக்கெழுத்து, கணக்கியல், வர்த்தகம், சிங்களம் முதலியன வற்றிற்குரிய வகுப்புகள் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விடுதி வசதிகள் உண்டு. யூனட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி, / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 594

இலண்டன் சேம்பர் ஒவ் கொம்மர்ஸ், இன்ஸ்ரிரியூற் ஒவ் புக்கீப்பர்ஸ், போஸ்ட் மாஸ்டர்ஸ் அன்ட் சிக்னலர்ஸ், குருவித்தியாலய பிரவேசம், அப்போதிக்கரி பிரவேசம், ஸ்ரேசன் மாஸ்டர்ஸ், மாணவ தாதிகள் பரீட்சைக்குரிய வகுப்புகளுக்கு தற்பொழுது விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. யுனைட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி/ 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்பாணம். 593

ஜி. சி. இ, சாதாரணப் பரீட்சைக்குரிய வகுப்புகளில், ஆங்கில மூலம் விஞ்ஞானம் — 4, தமிழ் மூலம் விஞ்ஞானம் — 6, கலை — 9 ஆகிய இடங்களே காலியாக உள்ளன. உடனே தாமதம் செய்யாமல் பதிவு செய்து கொள்ளுங்கள். யுனைட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி/ 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 595

ஜி. சி. ஈ. உயர்தர இரண்டாம் வருடத்தில் வைத்தியம், பொறியியல், கலை ஆகிய வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். யுனைட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 596

ஜி. சி. ஈ. உயர்தர நிலையில் சித்தியடைந்து சர்வகலாசாலையில் இடம் பெறாத மாணவர்களுக்காக ஜி. ஏ. கியூ. வகுப்புகள் தற்பொழுது தான் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. தாமதிக்காமல் உடன் சேருங்கள். பி. ஏ. வகுப்புகள் சில நாட்களுக்குள் ஆரம்பிக்க இருக்கின்றன. யுனைட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். 600

**கல்வி**

இந்த மாதத்தில் ஜி. சி. ஈ. (சாதாரணம்) வர்த்தக வகுப்புகளில் சேரும் 15 மாணவர்களுக்கு இலவசக் கல்வி அளிக்கப்படும். யுனைட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி., கரவெட்டி, /107 பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 601

**பொது அறிவுவினா விடை**

மத்திய எழுது வினைஞர் முதலான பகிரங்க பரீட்சைகளுக்கான ஆயிரத்துக்கு மேற்பட்ட அம்சங்கள் நிறைந்த கை நூல் விலை ரூபா 2/- ஸ்ரீகாந்தா அச்சகம் — புத்தகசாலை, யாழ்ப்பாணம். 603

**தேவை**

யாழ்ப்பாணம் 48, மானிப்பாய் வீதியில் உள்ள பட்டின உலோக வேலைக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அலுமினியம் உற்பத்தி செய்பவர்கள் (Spinners) பொலிஷ் பண்ணுபவர்கள் கம்மாலை வேலை செய்பவர்கள் தேவை. சம்பளம் தகுதிக்கேற்றவாறு வழங்கப்படும். 574

**[illegible]க்கு**

எவர்சில்வர் பாத்திரங்கள் வாங்க விரும்புகிறீர்களா? இதோ எமது புதிய ஸ்தாபனத்திற்கு ஒருமுறை விஜயஞ் செய்யுங்கள். அத்துடன் நிக்கல், குரோமியம், எலெக்ற்ரோ பிளேற்ரிங்கும் செய்து கொடுக்கப்படும். பாலன் எலெக்ரோ பிளேற்ரிங் வேர்க்ஸ், 424 A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 584

நல்ல நிலைமையிலுள்ள EY 2000 தொடர் இலக்கமுள்ள கில்மன் மிங்ஸ் கார் விற்பனைக்குண்டு, நம். 6, மாட்டீன் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 598

**வைத்தியம்**

சலரோகம், தொய்வு, வாதம், கிரந்தி, தீட்டு இறைத்தல், புத்திரப்பேறு. தகுந்தமுறையில் வைத்தியம் செய்பவர். பொ. செல்லையா, வைத்தியர், கந்தர் மடம், யாழ்ப்பாணம். 586

தொய்வு, சுசம், நீரிழிவு, வெள்ளை முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இலவசம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.






ஓடி ஆடி விளையாடுவதற்கும், ஊக்கத்துடன் பாடங்களை படிப்பதற்கும், நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாய் வளர்வதற்கும் குழந்தைகளுக்கு நிரம்பிய சக்தியும் பெலனும் அவசியம். ஆகவே அவர்களுக்கு மாமைட் விசேஷமாகத் தேவை. B வர்க்க விட்டமின்கள் நிறைந்திருக்கும் மாமைட் அவர்களை அனுதினமும் திடகாத்திரமாகவும் சுகமாகவும் இருக்கச் செய்கிறது.

ஆரோக்கியமாக சக்திமிகுந்து இருப்பதற்கு உங்கள் தினசரி ஆகாரத்தில் B விட்டமின்கள் அவசியம். உங்களுக்கு அனுதினமும் தேவையான B விட்டமின்கள் அனைத்தையும் அளிப்பது மட்டுமின்றி, மாமைட் ஒரு சிறந்த உணவு பொருளாகவும் இருக்கிறது. வெந்நீரிலோ அல்லது வெந்நீருடன் ஓரிரு சொட்டு எலுமிச்சம் பழச்சாறு கலந்தோ அல்லது தாளித்தோ மாமைட் அருந்தலாம். மாமைட்டை பட்டருடன் அல்லது பட்டரின்றி ரொட்டி, பிஸ்கட், அப்பம் இவற்றில் இலேசாக பூசி சாப்பிடலாம். குழம்பில் அல்லது சூப்பில் மாமைட் சேர்ப்பதனுல் அவற்றிற்கு மேலும் சுவையூட்டுகிறீர்கள். B வர்க்க விட்டமின்களை எளிதாக உட்கொள்வதற்கு மிக்க சுவையான முறை மாமைட்டை உங்கள் தினசரி உணவுடன் சேர்த்துக்கொள்வதே.

மாவுப் பொருள்
சர்க்கரைப் பொருள் அற்ற,
B விட்டமின் நிறைந்த,
தூய்மையான,
தாவர உணவுப்
பொருள்.




# மாமைட்

# சுவாமி  பூவலம்

★ சர்வோதயன் ★

மூர்த்த மஹேச்வரம்
உஜ்வல பாஸ்கரம்
இஷ்டம் அமர நர
வந்த்யம்
வந்தே வேததனும்
உஜ்ஜித கர்ஹித
காம காஞ்சன பந்தம்

(விவேகானந்த ஸ்தோத்திரம்)

உலகின் பல பாகங்களிலும் காலத்துக்குக் காலம் பெரியார்கள் சிலர் தோன்றியிருக்கின்றனர். அவர்களுட் பெரும்பான்மையினர் இலக்கியத்திலும், வரலாற்றிலும் இடம்பெறும் பான்மையினராய் பாரத தேசத்திலேயே தோன்றியிருக்கின்றனர் என்பது கீழைத் தேசங்களுக்குப் பெருமையளிக்கும் விஷயமாகும்.

கல்கத்தாவில் வக்கீல் தொழில் பார்த்துவந்த விஸ்வநாத தத்தர் என்பவருக்கும் அவர் மனைவியார் புவனேஸ்வரிக்கும் 1863-ம் ஆண்டு ஜனவரி மாதம் 12-ந் திகதி நரேந்திரநாதன் பிறந்தான்.

நரேந்திரநாதனைப் பெற்றோர்கள் செல்வமாக அழைத்த பெயர் வீரேசுவரன் என்பதாகும். அதிக துணிவும், மிகுந்த பிடிவாதமும் மிக்கவனாக நரேந்திரநாதன் விளங்கியமையே இதற்குக் காரணமாகும்.

தாய்தந்தையர்வளர்க்கும் பண்பும், கொடுக்கும் கல்வியுந் தாம் சிறுவர்களைப் பொறுத்தவரையில் இறுதிவரை நிற்பன. புவனேஸ்வரி அம்மையார் தமதுபுதல்வனுக்குப் புகட்டிவந்த பாடம் இராமாயணக்கதையாகும். இராம லீலா விநோதங்களாக அவர்கள் காலத்தில் வழங்கப்பெற்று வந்தவை நரேந்திரநாதனுடைய இளநெஞ்சிற் பதியத் தொடங்கி, இறுதியில் இராமர் மீதே பக்தி எழ தெய்வீக உருவில் இராம வணக்கஞ் செய்யத் தலைப்பட்டான்.

பரசமய வணக்கமும், இனமற்ற 'மனித இன மனப்பான்மை'யும் (மனிதாயம்) நரேந்திரநாதனுடைய வாழ்வின் முக்கிய அம்சங்களாக மாறிக்கொண்டிருந்த வேளை, அவன் தனது இளமைக் காலத்திலேயே பி. ஏ. பட்டம் பெற்று, சட்டப் படிப்பையும் ஆரம்பித்திருந்தான்.

மனிதனுக்கும் தெய்வத்துக்கும் உள்ள வித்தியாசங்களுள் ஒன்று: மனிதன் ஆசாபாசங்களாற்பிணைக்கப் பட்டவனாதலின், அவன் எவ்வளவு தெய்வீக நிலைக்கு உயர்த்தப்பட்ட பொழுதும் அவனுடைய மனம் என்பது பாசம் என்ற இழையிலேயே தொடுக்கப்பட்டவொன்றாக விருக்கும். தத்துவங் கடந்த பரப்பொருளோ உறவு முறைகள் கற்பிக்கப்பட்ட பொழுதும், நிலையான மாறாத தன்மை பெற்றதாக விளங்கும்.

நரேந்திரனுடைய தந்தையார் காலமானதும் அவனுடைய வாழ்க்கை பலவித இன்னல்களுக்கும் இலக்காகியது. வறுமை, பிணி, துன்பம் என்பன அவனை வாட்டத் தொடங்கின. அதனால் நிலையற்ற இன்பமும் நிலையற்ற செல்வமும் அவனை வெறுக்க, அவன் அவற்றையே துறந்துவிட்டான். உலகைத் துறக்கப் பூண்ட உறுதியில் நரேந்திரநாதன் சஞ்சரிக்கத் தொடங்கினான்.

காலத்தின் போக்கிற்கிணங்கவே மக்களுடைய வாழ்க்கை அமையும். அதற்கு ஒப்ப அவர் காலச் சூழ்நிலையில் வாதம், மமதை, கோபம், டாம்பீகம் முதலியனவே நாட்டிற் குடிகொண்டிருந்தன. சாந்தம், சத்தியம், அன்பு, அஹிம்சை ஆதியன மண்ணோடு மண்ணாகிவிட்டிருந்தன.

காலத்தின் கோலத்தில் நாடு பரிணமிகரஞ் செய்யத் தொடங்கியதும், அடிமை, வறுமை என்பன தலைதூக்க, அவற்றை அகற்றும் அகலொளியாக, மின்மினியாக மூலைக்குமூலை உலகமேபோற்றும் உத்தமர்கள் தோன்றி, பகலவராகப் பளிச்சிடுகின்ற பான்மை தோற்றும். இந்நிலையில் நாத்திகம் தலையோங்க, நரேந்திரநாதன் பலரிடமும் விசாரணை போதனை பெறுவதற்காய் அலைந்தான். சகல சமய குரவர்களிடம் சென்று 'வாதாடியும் முடிவான முடிவு அவனுக்குக்கிடைக்கவில்லை.

இவ்வேளை கல்கத்தாவுக் கருகிலுள்ள தக்ஷிணேசுவரத்தில் இராமகிருஷ்ணபரமஹம்ஸரென்ற பெரியார் வசித்து வருவதாகவும், சக்தி வழிபாட்டு மேன்மையினால் காளியம்மனின் கருணை அவருக்குக்கிடைப்பதாகவும் செய்திகள் பரவின. சமதர்ம வேதாந்த (சமரச) மதக்கொள்கைகள் உள்ளங்கள் எல்லாம் நிறைந்திருந்த வேளை அது. எளிய உபமானங்களாலும் கதைகளாலும் வருவோர்க்கு உபதேச துதிகை செய்திருந்தார் பரமஹம்ஸர். இந்நாளில் நரேந்திரநாதனும் அன்னாரைச் சரணடைந்தான்.

நரேந்திரநாதன் இந்து மதத்தின் சமரசக் கொள்கைகளைத் தெளிவாக பரமஹம்ஸரிடமிருந்து தெரிந்து கொண்டான். நாளடைவில் பல யோகசித்திகளையும் ஆத்மதரிசனத்தையும் பெற்றான். இராம கிருஷ்ண பரமஹம்ஸருடன் பழகிய ஐந்தாண்டுகளில், தனது இருபத்து நான்காவது வயதில் நரேந்திரநாதன் தனது உலகியலை ஒழித்து, உறவுக்கும் உயிருக்கும் அப்பாற்பட்ட யோகத்தின் தீப்பிழம்பேந்தி "விவேகானந்தர்" ஆனார்.

1886-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 16-ந் திகதி பரமஹம்ஸர் மண்ணுலகில் மறைந்ததும், அன்னாரின் பூதவுடல் அடக்கம் செய்த ஸ்தலத்தில் விவேகானந்தர் சமாதி கட்டி, அங்குள்ள மண்டபத்திலேயே போதனைகளை ஆரம்பிக்கலானார்.

'நீ உலகில் பல அற்புதங்களை ஆற்றுவாயாக' என்ற பரமஹம்ஸரின் ஆசீர்வாதம் இட்டுச்சென்ற இடங்களெல்லாம் 'விவேகானந்தம்' சென்று பெருகியது. 1891-ல் கப்பரையும் தடியுந் தாங்கிப் பூவலஞ் செய்யப் புறப்பட்டார். இந்திய யாத்திரைகள்இடம் பெற்றன. காடுகளில் தனித்து வசித்து, உணவு கிடைத்தபோது மட்டும் உண்டு வாழ்ந்து வரலானார். அனைய மக்களுக்கு வேதாந்தத்தின் வெளிப்பொருளை எடுத்துக்காட்டி, உள் நுணுக்கங்களில் உவமை காட்டி, உள்ளொளி பரப்பினார்.

அமெரிக்காவிலுள்ள சிகாகோ நகரில் கொலம்பஸ் என்ற பெயர் பெற்ற மாலுமி அமெரிக்காக் கண்டத்தைக் கண்டு பிடித்ததன் நிமித்தம் நூறுவருடங்களுக்கு ஒரு முறை ஓர் உலகக்காட்சியைக் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அக்காட்சியின் ஒரு பிரிவாகச் சர்வமத மஹாசபை ஒன்றை ஏற்படுத்தினர்.

புத்தம், சைனம், யூதம், ஜொராஷ்டிரம், கிறிஸ்தவம், மகம்மதியம், கான்பியூஸியம், ஷித்தோம் முதலிய பல மதத்தைப் பற்றிப் பேசுவோர் ஆரியமும் ஆங்கிலமும் அறிந்தவராகவும், சுயானுபவமுடைய தூயராகவுமிருக்க வேண்டியிருந்தது,

அத்தகைமைக்குரியவர் விவேகானந்தர் என்பதே தென்னாட்டு மக்களின் முடிபாக இருந்தமையால், அவரையே தெரிந்து, அமெரிக்கா செல்வதற்குப் பொருளுதவி, அனுப்பி வைத்தார்கள்.

1893-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ந் திகதி சர்வமத சபை ஆரம்பமாகியது. மசும்தார், நாகர்கள், காந்தி, அன்னிபெசன்ற் போன்ற பல மஹாத்மாக்களும், ஏழாயிரத்துக்கும் அதிகமான பிரமுகர்களும் விழாவில் கலந்திருந்தனர்.

முன்னவர்கள் 'சீமான்களே சீமாட்டிகளே' என்று அழைத்தவேளை, எல்லோர்க்கும் இறுதியாகப் பேச எழுந்த விவேகானந்தர், 'சகோதரர்களே! சகோதரிகளே!' என்று அழைத்தது சமரசத்தின் முன்னுரையாக மக்களுக்குப் புலப்பட்டது. இந்தியாவின் பெருமையையும்இந்துசமயத்தின் சமரச சன்மார்க்க நெறியையும் விளக்கி, சமயங்களிலே உயர்வு தாழ்வு இல்லை என்றும் நிலைநாட்டினார்.

வேதம் ஆத்மாவின் அழிவற்ற தன்மையைக் கூறுகின்றதென்றும், உயிர்கள் யாவும் இறைவனின் குழந்தைகள் என்றும், இந்துக்களின் மதம் சமரச வேதாந்தமென்றும் உரைத்து; எல்லாமதங்களுக்கும்வாழ்த்துக் கூறித் தம்முடைய நூதன அற்புத உரையை முடித்தார்.

பின்னர் இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற தேசங்களுக்குஞ் சென்று தமது சொற்பெருக்கை அளித்து அகமாசுகளைந்தார். மாக்ஸ் முல்லர் (Max Muller), ஜேர்மனியின் சிறந்த வேதாந்தியான பேராசிரியர் டென்சன் (Prof. Densen) முதலியோர் சுவாமி விவேகானந்தரை ஆங்காங்கு அழைத்து, அவர் தம் அளப்பரிய அறிவுரைகளையும், புனித வாய்மைத் தாய வேதாந்தக்கோட்பாடுகளையும் பெற்றனர். இவ்வண்ணமாக மூன்றாண்டுகள் மேனாடுகளில் சர்வ மத சமரசஞ் செய்து 1897-ல் தாயகம் மீண்டார்.

வறியவர்களும், திக்கற்றவர்களும், தாழ்த்தப்பட்டவரும், மக்களாலே தள்ளப்பட்டவரும் விவேகானந்த வெள்ளத்தில் சமரசராகி நீந்திக்களித்தனர். அந்த அருட்பெரு வெள்ளம் 1902-ம் ஆண்டு ஜூலை மாதம் 4-ந்திகதி தணிந்து, மக்கள் கண்களின் வெள்ளப் பெருக்காய்ப் பரிணமித்தது.

''நீ உலகில் பல அற்புதங்களை ஆற்றுவாயாக!''

---

பாரதஞ் செய்தவொரு மாபெருந் தவமதாற்
பகருங்கல் கத்தா வினில்
பண்பொழுகு புகழ்விஸ்வ நாதத் தருமவரின்
பாரிபுவ னேசு வரியும்
தூரணஞ் செய்தவொரு தூய்மைசெறி
நற்றவஞ்
சூழ்ந்தமிகு பேற்றின் விளைவால்
துன்னுமா யிரத்தெணூற் றறுபத்து
மூன்றினிற்
சொன்னதை பன்னி ரண்டில்
நாரண னெனத்தகு நரேந்திரன் நாமமார்
நாரகன் விவேக னந்தர்
நாடுமிரு ளகலவொரு நவிலொளியி லங்கவே
நல்லவொரு பரிதி யெனவே
பாரதத் தைப்பற்றி நின்றதனை யன்றறப்
பண்பற்றசீ ரழிவு குறையப்
பயனற்ற சாதிமத பாவமுறு போர்கெடப்
பாங்குடன் தோன்றி னாரே!

★

சிறுவயதி லிறைவேட்கை கொண்டவோர்
பத்தனாய்ச்
சீரார்பல் கலைகள் கற்றுத்
திகழ்கின்ற நூற்கடலி னுழங்க லைக்கண்டு
சிந்தித்த கரும யோகி;
சிறிராம கிருஷ்ணபர மஹம்ஸரின் சீரான
சீடனாய் அமைந்த சீலன்;
திருநிறையும் மேல்நாடு கள்சென்று பிரசங்கந்
தித்திக்கச் செய்த சிங்கம்;
உறுமிவரு மெதிரிகளை வாதங்க ளால்வென்ற
உலகவித யத்தி னொளியாய்
உறுவிடு தலைக்கென்று உயரியநன் னேக்குடன்
உரியவித் திட்ட யோகி;
மறுவற்ற பாரதத் தின்பெருமை மிகுசின்னம்;
மாசற்ற மலைவி ளக்காம்
மாட்சியுறு நம்விவே கானந்தர் தினமதை
மாண்பொடின் றுன்னு வோமே!

—கவிஞர் மூ. க. சூரியன்

---

## பிரமுகர்களும் நிகழ்ச்சிகளும்

**டாக்டர் மு. வ.**

சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவராகப் பணிபுரியும் டாக்டர் மு. வரதராசனரை அறியாதவர் இல்லை என்றே கூறலாம். இவரைத்தான் அன்பாக "மு.வ" என்று அழைக்கிறார்கள். டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளைக்குப் பிறகு பொறுப்பும், அறிவும், ஆற்றலும்ஒருங்கே தேவைப்படும் இவ்வுயர் பதவியை வகிக்கும் பெருமை இவருக்கேஉரியது. இதற்குமுன்பு டாக்டர் மு. வ. பச்சையப்பன் கல்லூரியின் தமிழ்த் துறைத்தலைவராகக் கடமையாற்றினார்.

நவீனம், இலக்கிய ஆராய்ச்சி, நாடகம், கட்டுரை ஆகிய எல்லாத்துறைகளிலும் கைவண்ணத்தைக்காட்டும் ஆற்றல் மிகச் சிலருக்கே உரியது. அத்தகையோர் குழுவில் டாக்டர் மு. வ. முன்னிலையில் திகழ்கிறார் என்றால் அது மிகையாகாது. தமிழ் நாட்டிலும் சரி, இலங்கையிலும் சரி, மலாயாவிலும்சரி தமிழ் இளைஞர்கள் உவந்துபடிக்கும் நாவல்கள் பலவற்றை இவர் எழுதியிருக்கிறார். நாவல்கள் மூலம் வாசகர்களிடத்தே ஒரு சிந்தனையை எழுச்சியை உண்டுபண்ணிய பெருமை டாக்டர் மு. வ. வுக்கு உரியது. இவர் சமூகத்திலே பின்னிக்கிடக்கும் பல தீய பழக்க வழக்கங்களையும், மூட நம்பிக்கைகளையும் நாவல்களிலே தத்ரூபமாகச்சித்தரிக்கும் ஆற்றல் நிரம்பியவர். இவரது பாத்திரங்கள் நாவல்களைப் படித்தபிறகும்வாசகர்களின் உள்ளத்திலே நீங்காத இடத்தைப் பெறும் இயல்பினையுடையன. இவரது "கள்ளோ காவியமோ" என்றபுத்தகத்துக்குசென்னை அரசாங்கம் பரிசில் அளித்தது. "அல்லி, "நெஞ்சில் ஒரு முள்", "கரித்துண்டு", "அகல் விளக்கு", "செந்தாமரை", "வாடாமலர்" ஆகிய பல நாவல்கள் எழுதியுள்ளார்.

இவரது ஆராய்ச்சித் திறமையினை அன்னாரது "மொழியியற் கட்டுரைகள்", "சொல்லின்கதை", "குறுந்தொகைவிருந்து", "நெடுந்தொகைவிருந்து", "திருக்குறள்அல்லதுவாழ்க்கை விளக்கம்" ஆகிய நூல்களில் அறியலாம். சைவசித்தாந்த பதிப்புக் கழகத்தாரால் வெளியிடப்பட்ட "திருக்குறள் தெளிவுரை" என்ற நூலே இவர் எழுதிய எல்லா நூல்களிலும் அநேகம் பிரதிகள் விற்பனையானது.

டாக்டர் மு. வ. வினுடைய நூல்களிலிருந்து அன்னாரது ஆழ்ந்த தமிழ் அறிவும், ஆங்கிலத்திலுள்ள அகன்ற அறிவும் தெற்றெனத் தெரிகின்றன. ஆங்கில மேதைகளான சேக்ஸ்பியர், பேனாட்ஷா, எச். ஜி. வெல்ஸ் போன்றோரது புத்தகங்களை ஆய்வுக்கண் கொண்டு கற்றுள்ளார். இவர் சங்க நூல்களுக்கு இயற்றிய புதுவகை விளக்கங்களைத் தமிழ் கூறும் நல்லுலகத்தில் உள்ள அறிஞர்கள் என்றும் மறக்கமாட்டார்கள்.

— [illegible]

# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஆனி மீ 20உ (4 7 65)


## ஒற்றுமைக்கு வழி

ஒரு தமிழ்த்தலைவர். பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில், மற்ளெரு தமிழ்க்கட்சி, தங்களுடன் ஒற்றுமைப்பட்டு ஒத்துழைக்க மறுக்கிறதே என்று வருந்தினர்.

மற்றக்கட்சியைச் சேர்ந்த தமிழ்த்தலைவரும், இதேமாதிரி ஒற்றுமையின் அவசியத்தை வேறொரு கூட்டத்தில் வற்புறுத்தி, மற்றவர்கள் ஒத்துழைக்க மறுப்பதாகக் கவலை தெரிவித்தார்!

இதேமாதிரி வேறு கட்சிகளும், அதன் தலைவர்களும் ஒற்றுமையின் அவசியத்தை உணர்ந்து அதைப்பற்றி வற்புறுத்தி வருகின்றனர்கள். தேசிய ஒற்றுமை ஏற்பட்டால்தான் நாடு முன்னேற முடியுமென்றும் ஆகவே எல்லாக் கட்சிகளும் தேச நன்மைக்காக ஒற்றுமையாக ஒத்துழைக்க வேண்டுமென்றும் வற்புறுத்துகின்றனர்கள்.

இப்போதுள்ள இலங்கை அரசாங்கத்தில் பல அரசியல் கட்சிகள் சேர்ந்துள்ளன. நேர்மாறான மனப்பான்மை கொண்டிருந்தவர்கள் இந்த அரசாங்கத்தில் சேர்ந்து அங்கம் வகிக்கின்றனர்கள். கொள்கையில் கருத்துவேற்றுமைகள் இருப்பினும், எதிர்க்கட்சிகளிடம் ஆட்சி அதிகாரம் மாறிவிடக்கூடாதென்றஒரேபொதுஎண்ணத்தால், இந்த 'நெல்லிமூட்டை' அரசாங்கம் அமைக்கப்பட்டுநடந்துவருகின்றது.

அரசாங்கக் கட்சிகளுக்குள்ளாக பலபல நெருக்கடிகளும் தகராறுகளும் ஏற்பட்டுள்ளதாகவும் செய்திகள் மெதுவாக அம்பலமாகின்றன. இவற்றையெல்லாம் சமாளித்து, இந்த அரசாங்கத்தை பிரதமர் டட்லி சேனநாயகா கொண்டு செலுத்தி வருவது ஆச்சரியமே.

சிறுபான்மை சமூகத்தின் குறைகளைத் தீர்த்து அவர்களுக்கு நியாயம் வழங்குவதாக முன்னாள் பிரதமரும் சுதந்திரக்கட்சித் தலைவருமான ஸ்ரீமா, கண்டியிலே தேர்தல் சம்பந்தமான முதல் கூட்டத்தில் பகிரங்கமாக அறிவித்தார் தேசிய ஒற்றுமை இல்லாததால்தான் நாடு முன்னேறவில்லை என்றும் சொன்னர். ஆனல் சமீபத்தில் அவரது பேச்சுக்கள் வேறு சுருதியிலே, முற்றிலும் மாறான ராகத்தில் இருப்பதைப் பார்க்கின்றோம்.

இதற்கெல்லாம் காரணமென்ன? ஒற்றுமையின் அவசியத்தை எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் உணர்ந்தும், அவர்கள் ஒற்றுமைப்பட்டு ஒத்துழைக்க ஏன் முன்வரவில்லை? இது மிக முக்கியமான கேள்வி. இதைப்பற்றி ஆராய்ந்துகாரணங்களைக் கண்டுபிடித்து, அவற்றை நீக்குவதற்கான வழிவகைகளைச் செய்தாலே நாட்டுமக்களுக்குவிமோசனமேற்படமுடியும்.

நாட்டில் மட்டுமல்ல, வீட்டிலும் ஒற்றுமை ஏற்படவேண்டுமென்றால், சுயநலனை விட்டு பொதுநலனுக்காக வாழும் தியாகபுத்தி முக்கியமாகத் தலைவர்களுக்கு அவசியமாகும். ஆனல் துரதிருஷ்டவசமாக இன்று அவ்வித தியாகபுத்திக்கு மிகப் பஞ்சமேற்பட்டுள்ளது. ஒவ்வொருவரும் தங்கள் கட்சி நலனையும், தங்கள் சுயநலனையுமே பெரிதாக மதிப்பதாயின் விரும்பத்தக்க ஒற்றுமையும் ஒத்துழைப்பும் எப்படி ஏற்படமுடியும்?

சுயநலனை விடுவதென்பது சுலபமல்ல. பொது நலனில்தான் தங்களது சுயநலனும் உண்மையாக அடங்கியுள்ளதென்ற ஞானேதயம் ஏற்பட்டுவிடுமாயின் இன்று நம்மை வருத்தும் பலபல பிரச்னைகளும் தீர வழிபிறக்கும். அவ்வித நல்லறிவு ஏற்படவேண்டுமாயின் அது தெய்வஅருளால்தான்முடியும்.

புதிதாகச் சுதந்திரமடைந்த நாட்டில், சமய வேற்றுமைகளே மக்களை ஒற்றுமைப்பட முடியாமல் தடுக்கின்றனவென்பதை உணர்ந்துதான், மகாத்மா காந்திபடிகள், சர்வசமய கூட்டுப்பிரார்த்தனைகளை நடத்தி, "ஈசுவர அல்லா தேரேநாம், ஸபுகோ ஸன்மதி தேபகவான்" (ஈசுவரன், அல்லா என்பனவெல்லாம் உன் நாமங்களே. இந்த நல்லறிவை, பகவானே, எங்களுக்குத்தா) என்றுவேண்டசெய்தார்.

ஆனல் பொதுவான ஒரே தெய்வத்தை எல்லோரும் சேர்ந்து வழிபடமுடியாமல், சமய வேற்றுமைகளும் சமய உயர்வு தாழ்வு சுயநல எண்ணங்களும் குறுக்கே நிற்கின்றன. தங்களைப் பல்வேறு சமயத்தையுஞ் சேர்ந்த வாக்காளரும் ஆதரித்துள்ளனரென்பதை தலைவர்கள் ஞாபகப்படுத்திக்கொண்டால், குறுகிய சுயநல எண்ணங்களைவிட்டு, எல்லாச் சமயத் தலைவருடனும் கூடி பக்தியுடன் பிரார்த்தனை செய்ய மறுக்க முடியாது.

மக்களும் சிறப்பாகத் தலைவர்களும், சமய விஷயமாக இவ்வித பரந்த நோக்கம் கொண்டு, மகாத்மா காட்டிய வழியில் பொதுவான தெய்வ அருளை வேண்டிப் பிரார்த்தனை செய்வதொன்றுதான் நமது சுயநல மனமாசுகள் நீங்கவும், ஒற்றுமை ஏற்படவும் வழிவகுக்கும். ஆனல்.....

# கல்வளைப் பெரும்பதி

— எஸ். கோபாலசாமி —

உலகிலே பொதுமக்களின் பாவிப்புக்குரிய இடங்களிலிருந்து மக்கள் என்ன போக்குடையவர்களென்பதை அறிய முடியும். ஒரு நாடு மக்களின் பரோபகாரப்போக்கை நிறையப்பெற்றிருந்தால் அயல் நாட்டிலிருந்து அந்நாட்டுக்குவரும் அதிதிகள் சுலபமாகக் கண்டு கொள்ளக் கூடியதாக இருப்பன நாட்டின் பொதுஸ்தாபனங்களாகும். ஆலயங்கள், பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், களியாட்ட மைதானங்கள் அவ்வவ்விடத்து மக்களின் மனோபாவங்களைக் காட்டும்.

இத்தகைய முக்கியத்துவம் நிறைந்த பொதுஸ்தாபனங்கள்தாம் பழந்தமிழ் மக்களாற் போற்றி, பரம்பரை பரம்பரையாக வளர்க்கப்பட்டு வந்தன.

அறிவு நிறைந்தவனிடம் செல்வம் கிடைத்தால் அது பொதுவுடைமை என்பதில் சந்தேகமில்லை. அருட்செல்வம் கிடைக்க உதவிய அறிவுச்செல்வம், பொருட்செல்வத்தைப்போற்றுது.எனவேதான் அது பொது உடைமையெனக் கூறத்துணிந்தனர். ஆலயங்கள் எவருக்கும் சொந்தமானவையல்ல. அவைபொதுச்சொத்து. எல்லோரின் உபயோகத்துக்கும் உரிய பொது ஸ்தாபனம். இவை பாழடைந்து இருப்பது, மக்கள் இதயம் சுருங்கியிருப்பதைத்தான் காட்டுகிறது. ஈழநாட்டிலும் சரி, தமிழ் நாட்டிலும் சரி பல்லாயிரக்கணக்கான கோயில்கள் எழும்பியிருந்தன. அவை இப்போது பாழடைந்தநிலையில் காட்சி கொடுப்பது மிகவும் வருத்தத்திற்குரியதே. குறுகிய மனப்பான்மை எமது மக்களை முட்டிக் கொண்டதனல்போலும், தனி வீடுவாசல், மோட்டார் வண்டி பவனிவர, பணம் சேமித்து வட்டி வாங்க என்ற பல விபரீதமான போக்குகளால் எமது நாடு, இனம் ஆகியன இக்கட்டான நிலையை அடைந்துள்ளன.

பழம்பதி

முன்பக்கமாக வயல்களையும், சுற்றிவர தென்னந்தோப்புகளையும், வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு ஆகிய திசைகளில் முறையே பிரசித்திபெற்ற அங்கணம்மைக்கடவை மீனாட்சியம்மை, கஜபாகு மன்னனல் ஆக்கப்பட்ட பத்தினி கோவில் (கண்ணகைஅம்மை ஆலயம்), மருதடி விநாயகர் ஆலயம், சீரணி நாகம்மை கோவில் ஆகியவற்றைப் பெற்று மையமாக இருப்பது கல்வளைப் பெரும்பதியாகும். முன்னர் நல்லை

(5ம் பக்கம் பார்க்க)

# உங்கள் இராசி பலன்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

புத்திர சுகமுண்டாதல் ஆதியன காணப்படுகின்றன.

சிங்க இராசி

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் குடும்பத்தில் சமாதானம் நிலவுதல், இனபந்துக்கள் சேர்க்கை, சுபகரும கொண்டாட்ட முயற்சி, எதிரிகள் வீழ்ச்சி, பெரியார் சேர்க்கை, செய்தொழில் பலன் தருதல், பணவரவுண்டாதல், வெளிநாட்டுப்பிரயாணம், நண்பர் மறைவு, தேகாரோக்கியமுண்டாதல், கமத்தொழில்-வர்த்தகம் மத்திம நிலையில் இருத்தல், பணம் கொடுக்கல் வாங்கல் பிணக்குண்டாதல், மாணவருக்கு கல்விச் சிறப்பு, உத்தியோகத்தருக்கு ஊழியர், அதிகாரிகள் ஆதரவு, பொறுப்புக்கள் அதிகரித்தல், பணவரவு, பெண்களுக்கு குடும்பத்தில் நன்மைகள், சமூகத்தில் செல்வாக்குண்டாதல், பொன் பொருள் சேர்க்கை, கல்விச்சிறப்பு ஆதியன காணப்படுகின்றன.

கன்னி இராசி

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் நல்ல நண்பர் சேர்க்கை, பணவரவு, தேகாரோக்கியச் சிறப்பு, இனபந்துக்கள் சேர்க்கை-கொண்டாட்டம், சமூகத்தில் செல்வாக்கு விருத்தியடைதல், பணப்புழக்கம், செய்தொழில் சிறப்புத்தருதல், கல்வித்துறையில் ஊக்கமும் உயர்வும் கிடைத்தல், கமத்தொழில் வருவாய் தரல், பூமிப்பலன், வர்த்தகத்துறை அபிவிருத்தி, பங்காளர் தொல்லை, ஏமாற்றம், உத்தியோகத்துறையில் சிக்கல்கள் ஏற்படல், கோபந்தரக்கூடிய செயல்கள் நடத்தல், பணமுடை: பெண்களுக்கு சமூகச்செல்வாக்குயர்வு, நல்லோர் சேர்க்கை, குடும்ப சுகம், சிறப்புண்டாதல், புதிய நண்பரால் நலன் விளைதல் ஆதியனகாணப்படுகின்றன.

துலா இராசி

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் செய்தொழில் வெற்றி, மதிப்புயர்ச்சி, பணவரவுண்டாதல், பொன்பொருள் சொத்துச் சேர்க்கை, குடும்பத்தில் அமைதிகாணல், தேகநலமுண்டாதல், கமத்தொழில் விருத்தியடைதல், ஊழியரால் உதவிகிடைத்தல், உத்தியோகத்துறையில் இடர்கள் மறைந்து அதிகாரிகளது ஆதரவு கிடைத்தல், பரீட்சைகளில் வெற்றி, கல்வித்துறையில் மாணவருக்கு நற்பலன்கள் கிட்டல், பெண்களுக்கு தேக நலம் பாதிக்கப்படல். குடும்பத்தில் சிறப்பு, பொருள்வரவு, மாதுருவழி உதவி ஆதியன உண்டாம்.

விருச்சிக இராசி

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் பலவிதமான நற்பலன்களும் கிடைத்தல், பழைய கடன்கள் வசூலாதல், நற்குணமுடையோர் சேர்க்கையால் பலன்கள், பெருகுதல், பணவரவு, முயற்சிகள் இலாபந்தருதல், குடும்பத்தில் அமைதிகாணல், வெளியில் உள்ள உறவினர் தொல்லை. விளைத்தல், உணர்ச்சியை அதிகரிக்கச் செய்யும் செயல்கள் நடத்தல், கமத்தொழில் பலன் தருதல், வர்த்தகத்துறை அபிவிருத்தி, பொருள் வரவு, பிரயாணத்தில் பொருள் சேர்க்கை, கல்வித்துறையில்அபிவிருத்தி, மாணவருக்கு சிறப்புண்டாதல், உத்தியோகத்துறை சிறப்படைதல், அதிகாரிகள் உதவியால் பொறுப்புக்கள் வகித்தல், பெண்களுக்கு தேகாரோக்கியம், பொதுத் தொடர்புகள் அதிகரிப்பு, ஏமாற்றம், அவமானச் செயல்கள் நடக்க சாதகமான சூழல் அமைதல், (ஆண்களது விடயத்தில் அவதானம்) தெய்வழிபாடு ஆதியனகாணப்படுகின்றன.

தனுசு இராசி

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் தேகாரோக்கியம் காணப்படல், செய்தொழிலில் எதிர்பாராத இடர்கள் ஏற்படல், குடும்பத்தில் சச்சரவுண்டாதல், இனபந்துக்கள் தொல்லை தரல், மனச்சங்கடம், ஆழ்ந்த யோசனை, பிரயாணங்கள் ஏற்படல், விபத்துக்களால் கஷ்டங்கள் விளைதல், பணச்செலவு அதிகரித்தல், தேகநலம் பாதிக்கப்படல், கமத்தொழில்-வர்த்தகம் பாதிக்கப்படல், மாணவர் கல்விநிலை மத்திம பலன் தருதல். உத்தியோகத்துறை மத்திமபலன் தரினும் ஊழியர் விஷயத்தில் ஜாக்கிரதை அவசியம், பெண்களுக்கு பணவரவு, மதிப்புணர்ச்சி, தேக சுகம், தெய்வ வழிபாடு ஆதியன காணப்படுகின்றன.

மகர இராசி

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் தேகநலம் பெறுதல், பணமுடை வீங்குதல், பழையபாக்கிகள் வருதல், செய்தொழிலில் தீவிர முயற்சி, செல்வாக்கு உயர்வடைதல், புதியமுயற்சிகள் தடைப்படல், செய்தொழிலையே முறையாகச் செய்தால் நன்மைதரல், மாணவருக்கு கல்வி மத்திம பலன் தரல், வர்த்தகம் முன்னையிலும் பலன் விருத்தியடைதல், (விஸ்தரிப்பு வேண்டாம்), கமத்தொழில் பலன் தரல், தொழில் சம்பந்தமாக பிரயாணங்கள் ஏற்படல், உத்தியோகத்துறையில் அபிவிருத்தி காணல், பழைய சம்பவங்களுக்குப் புதிய விளக்கங்கள் மூலம் தெளிவு ஏற்படல், பெண்களுக்கு பிதுரு-மாதுரு பருவ உதவிகள்கிடைத்தல், கல்வி-உத்தியோக வளர்ச்சி, ரணவரவு - செல்வாக்குண்டாதல் ஆதியன காணப்படுகின்றன.

கும்பராசி

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் முயற்சிகளால் பெருமளவில் இலாபங்கிடைத்தல், நண்பர்-முதியோர் உதவி, எதிரிகள் சரண்புகல், காதலில் புரட்சித்தமை ஏற்படல், பிரயாணங்கள்-செலவுகள் அதிகரிப்பு, இடையிடையே விபத்தேற்படக்கூடிய சான்றுகள் காணப்படல், கமத்தொழில் மத்திம பலிதம்தருதல், வர்த்தகம் சிறப்படைவதுடன் பங்காளரும் அமைதியாக இருந்து உதவிபுரிதல், உத்தியோகத்துறை மத்திமபலிதம்தருதல், அதிகாரிகாரிகள் உதவி கிடைத்தல், புதிய பொறுப்புக்கள் ஏற்படல், மாணவர் கல்வி நிலைமையில் மாற்றங் காணல், பெண்களுக்கு ஆண்களால் ஏமாற்றம், சமூகத்தில் மதிப்புக்குறைதல், அவமானமான செய்கைகள் அதிகரிப்பு, குடும்ப சுகக் குறைவு ஆதியன உண்டாம்.

மீனராசி

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் பிதா மாதா வழி நலன்கள் விளைதல், பொருள் வரவு, குடும்பத்தில் விதண்டாவாதமேற்படல், சுபகருமப் பேச்சுக்கள் நடத்தல், பணமுடை நீங்குதல், எதிரிகளாலசெய்தொழில் பணகட்டம் ஏற்படல், கஷ்டமான பிரயாணங்கள் செய்தல், வர்த்தகத்துறையில் மந்த நிலைமை காணல், செலவுகள் அதிகரித்தல், தேகநலம் பாதிக்கப்படல், பிணைப்போதல் தொல்லைகள்விழைதல், கமத்தொழில் சொத்துக்களால் கஷ்டம், தாயாதிகள் கரைச்சல் விழைதல, கலவித்துறை மத்திம பலிதம், உத்தியோகத்துறை அதிகாரிகள் ஆதரவிருப்பினும் ஊரவரால் தொல்லைகள் விழைதல், பெண்களுக்குச் சுபகருமய்கள் நடத்தல் (விவாகம், ருதுமங்களம், குழந்தைப் பேறு போன்றவை நடத்தல்), இனபந்துக்கள் சேர்க்கை ஆதியன காணப்பட இடமுண்டு.

# உலகமேடை

## அல்ஜீயர்ஸ் நாடகம்

ஆசிய - ஆபிரிக்க உச்சி மகாநாடு ஒத்திவைக்கப்பட்டது ராஜதந்திரத்துறையில் சீனுவுக்கு ஏற்பட்ட ஒரு தோல்வி என்பதில் சந்தேகமில்லை. எனினும் இந்த ஒத்திவைப்பு ஏகாதிபத்திய வாதிகளுக்கு ஒரு பாடம் என சீனுவின் 3-வது தலைவரான மார்ஷல் சென்யீ கூறியிருக்கிருர்! எந்த வகையில் தோல்வி என்ற இரகசியத்தை மட்டும் அவர் வெளியிடவில்லை.

அல்ஜீரியாவில் அரசியல் நிலை நிச்சயமற்றிருந்த போதும் அதை நடத்தியே தீரவேண்டும்என சீனு தீவிரமாகவும், பிடிவாதமாகவும் முன்னணியில் நின்றதென்பதை உலகமே அறியும். அமெரிக்காபோன்ற ஏகாதிபத்தியவாதிகள் கண்டனத்திற்குள்ளாவார்கள் என்பதற்காகவே மகாநாட்டை ஒத்திவைக்கச் சிலர் முயல்கிருர்கள் என்று கூட சீனு ஆரம்பத்தில் குற்றஞ்சாட்டியது. பெரும்பான்மையான நாடுகள், மகாநாடு இப்போது வேண்டாம் எனக் கூறியபோதும் சீனுவும், ஒரு சில நாடுகளும் அதை நடத்துவதில் மும்முரமாய் நின்றன.

வெளிநாட்டு மந்திரிகள் மகாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது சீனு மிகப்பெரும் தூதுகோஷ்டி ஒன்றை அல்ஜீயர்ஸுக்கு அனுப்பியிருந்தது. போதாதற்கு சீனப்பிரதமர் சூ-என்-லாய் 10 தினங்களுக்கு முன்பே கெய்ரோவுக்கு வந்து மகாநாட்டுக்காக காத்திருந்தார். அண்டை நாட்டில் தனது பிரசன்னம் மகாநாட்டை நடத்தவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை வலுவாக்கும் என அவர் எதிர்பார்த்தார். மத்திய கிழக்கின் முடிசூடா மன்னரான நாஸரையும் தமக்கு ஆதரவாகத் திரட்டுவதில் சூ வெற்றி பெற்ருர். ஆனல் அவ்வளவும் ஏமாற்றத்தில் முடிந்தது. சீனுவின் வற்புறுத்தலேயோ, சூ என் லாயின் பிரசன்னத்தையோ பெரும்பான்மை ஆசிய-ஆபிரிக்க நாடுகள் முக்கிய அம்சமாகக் கருதவில்லை. நடைமுறை நிலையைப் பரிசீலித்து உச்சி மகாநாட்டை ஒத்திவைத்து விட்டார்கள். இந்த ஒத்திவைப்புக்கு மூலகாரணமாய் விளங்கிய நாடுகளில் ஒன்று இந்தியா. எனவே அல்ஜீயர்ஸில் சீனுவை இந்தியா ராஜதந்திரத்துறையில் வெற்றி கண்டுவிட்டது. ஆசிய-ஆபிரிக்க உலகில் சூ-என்-லாயின் செலவாக்கு எவ்வளவு என்பதையும் இச் சம்பவம் நிரூபித்துவிட்டது.

மகாநாடு பின்போடப்பட்ட பின்பும் சூ தாயகம் திரும்பவில்லை. அப்படித் திரும்பினல் தமது நீண்டநாள் கெய்ரோ வாசம்பற்றி தப்பெண்ணம் ஏற்படும் என சிறந்த மதியூகியான அவர் கருதியிருக்கக்கூடும். எனவேதான் மேலும் சில தினங்கள் அங்கு தங்கி நாஸர், சுகர்ணே, அயூப் ஆகியோரைச் சந்தித்தார். ஒத்திவைப்பு பற்றி அவர்கள் விவாதித்தார்கள். இன்னும் 4 மாதங்களுக்குப் பின் உத்தேச மகாநாட்டை வெற்றிகரமாக நடத்துவது எனச் சபதமும் எடுத்துக்கொண்டார்கள்.

இக்கட்டத்தில் அல்ஜீரியாவில் ஏற்பட்ட நிலைமையையும் சற்றுக் கவனித்தாக வேண்டும்.

பதவிநீக்கப்பெற்ற பென் பெல்லாவுக்கு மக்களின் ஆதரவு இருக்கிறதென்பதை அங்கு தொடர்ச்சியாக நடைபெற்ற ஆர்ப்பாட்டங்கள் நிரூபித்தன. புரட்சி நடத்திய கர்னல் பொமீதியன் சமீபத்தில் தான் சீனு போன்ற நாடுகளுக்குச்சென்றுவந்தார் என்பதும், ஆபிரிக்கா புரட்சிக்குத் தயாராகிவிட்டது என சீனப் பிரதமர் தெரிவித்த சில் தினங்களில் அல்ஜீரியாவில் புரட்சி ஏற்பட்டது என்பதும் இங்கு ஞாபகத்தில் கொள்ளத்தக்கது. எனவேதான் மகாநாட்டை நடத்த வேண்டும் என்ற விஷயத்தில் அல்ஜீரியாவும் ஆரம்பத்தில் பிடிவாதமாக நின்று சீனுவை ஆதரித்தது.

எனினும் ஆசிய-ஆபிரிக்க நாடுகள் மகாநாட்டைத் தவிர்த்ததன் மூலம் இந்த நாடுகளிடையே ஒரு கோஷ்டிப் பிளவு தடுக்கப்பட்டதாகக் கொள்ளலாம்.

★

## தித்திப்பு

### வேலையாட்கள்

சேவகராற் பட்ட சிரமமிகவுண்டு கண்டீர்; சேவகரில்லாவிடிலோ செய்கை சகிக்கவில்லை என்ருர் பாரதி. அநேக வேலையாட்கள் பொறுப்பை ஏற்றுக்கொள்ளத்தயாராக இல்லாமல் இட்ட வேலைகளையே செய்பவர்கள். இது என்னுடைய வேலை; அது என் வேலை இல்லை என்று கூறும் சுபாவம் உள்ளவர்கள்.

ஒரே ஒருரில் ஒரு தனவந்தன் இருந்தான். அவனிடம் பல விலை பெற்ற பசுக்கள் இருந்தன. ஒரு நாள் மாலை, ஒரு வேலையாள் ஓடிவந்து, 'எசமானனே, சிவலைப் பசுவின் கன்றுக்குட்டி மந்தையுடன் திரும்பி வரவில்லை. மாடுகளுடன் வந்திருக்கும் என்று நினைத்தோம். இப்பொழுதுதான் அது வரவில்லை என்பது தெரிந்தது. என்ன செய்வது?' என்ருன். இதற்குள் நன்ருக இருட்ட ஆரம்பித்து விட்டது. காலை வரையில் காத்திருந்தால் கன்றுக்குட்டிக்கு ஏதாவது அபாயம் ஏற்படக் கூடுமே என்று பயந்து, எசமானன், பல்லக்கைச் சுமப்பதற்காகத் தயாராக நின்றிருந்த ஆட்களைக் கூப்பிட்டு, 'நான் இன்று எங்கும் வெளியில் போகப் போவதில்லை; நீங்கள் மாடுகள் மேயும் இடத்திற்குச் சென்று, கன்றுக்குட்டியைத் தேடி வாருங்கள்' என்ருன். அதற்கு அந்தப்பணியாட்கள், 'எசமானனே, பொழுதோ இருட்டிவிட்டது; மாடுகள் மேயும் இடத்திற்குப் போவதற்கு முள்ளும், கல்லுமான வழிகளால் போக வேண்டும். மேலும் பல்லக்குச் சுமப்பது எங்கள் வேலையே அன்றி, கன்றுக்குட்டி தேடுவது எங்கள் வேலை இல்லையே?' என்ருர்கள். பிரபு ஒரு நிமிஷ நேரம் யோசித்துவிட்டு, 'நல்லது; நீங்கள் சொல்லுவது உண்மையே! பல்லக்கைச் சுமப்பதே உங்கள் வேலை; கன்றுக்குட்டி என்னுடைய சொத்து; அதைத்தேடுவது என் பொறுப்பு; மாடுகள் மேயும் இடத்திற்குப் போங்கள். நான் கன்றுக்குட்டியைத் தேடுகிறேன். நேரமாகிறது; தூக்குங்கள் பல்லக்கை!' என்ருன்.

### இரத்தப்பலி

வேண்டாம் இனி இரத்தப்பலி. செவ்வரத்தக் கொடியின் மலர்கள் இரத்தத்தைப் போலச் சிவப்பாக உள்ளன. அவை பூமித்தாயின் பிள்ளைகள் கொல்லப்படுவதற்கு மனம் நொந்து மண்ணிலிருந்து வெளிக்கிளம்பின என்றே எனக்குத் தோன்றுகிறது. இதை நீங்கள் கட்டாயம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

—கவிதாகூர் ('பலி' நாடகத்தில்)

### வெய்யில் மாரி [illegible]

திடீரென்று பஸ்ஸுக்குள் மழை பெய்தது! ஆனல் வெளியே நல்ல வெய்யில்! மழை பெய்வதற்கான அறிகுறி எதுவும் இல்லை.

இது என்ன புது ஏற்பாடா? பஸ் பிரயாணத்தில் குளிர்ச்சி ஏற்படுத்துவதற்காக பஸ் சபையார் நவீன ஏற்பாடு எதையும் செய்திருக்கிருர்களா?

பஸ் பிரயாணிகள் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள். கடைசியில் தான் விஷயம் புரிந்தது.

ஒருவர் வாய் நிறைய வெற்றிலை போட்டு எச்சிலை பஸ் ஓடிக்கொண்டிருந்த போதே 'புளிச்' சென்று துப்பி விட்டார்.

### உடலை ஆறி [illegible]

நாம் மற்றவர்களுடன் கலக்காமல் ஒதுங்கி நிற்க வேண்டும் என்பதோ அல்லது நம்மைச் சுற்றிச் சுவர்களை எழுப்பிக் கொள்ள வேண்டும் என்பதோ என்னுடைய கருத்தல்ல. ஆனல் முதலில் நம்முடைய கலாச்சாரத்தைப் புரிந்து கொண்டு, அதன்படி நாம் நடக்க ஆரம்பித்த பிறகுதான் மற்ற கலாச்சாரங்களைப் பற்றி அறிய ஆரம்பிக்க வேண்டும் என்பதே என்னுடைய வாதமாகும்.

— 'மற்ற மொழிகள்' கட்டுரையில்
மகாத்மா காந்தி

### ஒரு குறிப்பு

பதிப்பாசிரியர்: (வந்தவரிடம்) நான் எழுத்தாளர்கள் பட்டியல் ஒன்றைத் தயாரிக்க விரும்புகிறேன். அதற்கு உதவியாக உமக்குத் தெரிந்தவர்களுடைய பெயர்களை (நினைவு இருக்கும் வரை) எழுதிக்கொடும் பார்ப்போம்!

வந்தவர்: அதுக்கென்ன ஸார்! (என்று கூறியபடி எழுத ஆரம்பித்தார்; அரை மணி நேரத்தின் பின்னர்...) இந்தாருங்கள்! எழுதி முடித்துவிட்டேன்.

பதிப்பாசிரியர்: அடடே! உம்முடைய பெயரும் அல்லவா இருக்கிறது?

வந்தவர்: ஆமாம் ஸார்! இவ்வளவு பெயர்களையும் பட்டியல் செய்து தந்தேன் அல்லவா!

## அமெரிக்காவின் திண்டாட்டம்

வியட்னமில் சண்டையை நிறுத்த ஆங்காங்கே பரவலாக நடைபெற்ற சமரச முயற்சிகள், கடைசியாக ஒன்றுசேர்ந்து காமன்வெல்த் சமாதானக்குழுவாக உருவெடுத்தது. என்ருலும் இந்த சமாதானக் கோஷ்டியை வரவேற்க கம்யூனிஸ்ட் நாடுகள் தயாராய் இல்லை. பிரச்னையில் சம்பந்தப்பட்ட ஒரு சாரார் சமாதான முயற்சியை நிராகரித்து விட்டபின், மற்ருேர் சாராரிடம் மட்டும் சமரசக் குழு செல்வதில் பயனில்லை. எனவேதான் அதன் யாத்திரை தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

அதேசமயம் வியட்னமில் சண்டை நிறுத்தம் ஏற்பட வேண்டும் என இரு சாராருமே ஏகமனதாக விரும்புகிருர்களா என்பதில் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. வட வியட்னம் விதிக்கும் நிபந்தனைகளும், சண்டையை தொடர்ந்து நடத்தவேண்டும் என்ற சீனுவின் அறிக்கையும், தென் வியட்னமில் நடைபெற்றுவரும் சம்பவங்களும் இந்த சந்தேகத்தை மேலும் அதிகமாக்கியிருக்கின்றன.

தற்போது நடைபெறும் சம்பவங்களைப் பார்க்கும் போது வியட்னமில் சமாதானம் ஏற்படுவதற்குப் பதில், பெரியபோர் ஒன்று ஏற்படுவதற்கான அறிகுறிகளே அதிகமாகத் தென்படுகின்றன.

வட வியட்னமிலிருந்து ஊடுருவல் செய்ததாகக் கூறப்படும் முறையான பட்டாளங்கள் பெரியதாக்குதல் ஒன்றுக்கு அணிவகுத்துவருகின்றன. தென்வியட்னமும் போர்க்கால நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறது. அமெரிக்க, ஆஸ்திரேலிய, நியூஸிலந்து, தென்கொரிய, தென்வியட்னமிய துருப்புக்கள் சண்டையில் பூர்வாங்கமாக ஈடுபாடு கொண்டிருக்கின்றன. இருந்தபோதிலும், சமீபத்தில் பல சண்டைகளில் அமெரிக்கருக்குத் தோல்வியும், பெருநஷ்டமும் ஏற்பட்டன.

சமீபத்தில் அமெரிக்க ஆஸ்திரேலிய துருப்புக்கள் டியன்ஹோவில் நடத்திய தாக்குதல் தோல்வியில் முடிந்தது. பலமான தாக்குதல் நடத்தியும் இப்பகுதியிலிருந்த கொரில்லாக்களை அகற்ற முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அதே சமயம் டானங் விமானத்தளத்தில் கொரில்லாக்கள் அதிசயமான தாக்குதல் நடத்தி பல அமெரிக்க விமானங்களைச் சேதப்படுத்தினர். அமெரிக்காவின் மிகப்பெரிய இந்த விமானத்தளத்தை 9000 மாலுமித்துருப்புகளும், தென் வியட்னம் துருப்புகளும்கண்காணிப்புடன் பாதுகாத்துவரும்நிலையில், இப்படிப்பட்ட தாக்குதல்களை நடத்தியது வியட்காங்கியரின் தீரத்தையும், துணிச்சலையுமே காட்டுகிறது.

வியட்னமில் ராணுவத் தீர்வு சாத்தியமில்லையென உலகமே கூறிவருகிறது. என்ருலும் சண்டையில் வெற்றி பெறுவது ஒன்றே வியட்னம் பிரச்னைக்குப் பரிகாரம் என சீனு அறிவித்திருப்பது அங்கு சமாதானத்தை ஏற்படுத்தும் வாய்ப்பை கானல் நீராக்குகிறது.

அதே சமயம் மற்ருேர் விஷயமும் இங்கு கவனிக்கத்தக்கது. வட வியட்னம் மீதுஅமெரிக்காமாதக் கணக்கில் குண்டுவீச்சு நடத்தியும் ஹானேயிலிருந்து தென் வியட்னம் வரும் சப்ளையை நிறுத்த முடிந்ததாகத் தோன்றவில்லை. மாருக, ஆயுதபாணியான பட்டாளங்களும், இதர சப்ளைகளும் அங்கிருந்து வியட்காங்கியருக்கு வந்து கொண்டுதானிருக்கின்றன.

இவற்றுக்கெல்லாம் காரணம் என்னவாய் இருக்கும்? தென்வியட்னமில் பெரும்பான்மை மக்களுக்கு பிரதிநிதித்துவம் வகிக்கும் அரசாங்கம் இருக்கிறதா என்ற கேள்வியில்தான் இக்காரணங்கள் தங்கியிருக்கின்றன. மக்களின் ஆதரவுபெற்ற அரசாங்கத்தினல் மட்டுமே போரைத்தீவிரமாக நடத்த முடியும்.

தென் வியட்னமில் உள்நாட்டு அரசியல் பலவீனத்தையும், வியட்காங்குகளுக்கெதிரான போரையும்அமெரிக்கா சமாளிக்கவேண்டியிருக்கிறது. இந்த இருமுனைச் சோதனையில் மாட்டிக் கொண்டிருக்கும் அமெரிக்க நாடு வியட்னம் சிக்கலிலிருந்து எப்படி வெளியேறும் என்பது தெரியவில்லை.

## கல்வளைப் பெருமை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நகர் சின்னத்தம்பிப் புலவரால் அந்தாதி பாடப் பெற்றதிருப்பதியும் இதுவேயாகும். சண்டிருப்பாய் 'நடுக்குறிச்சி' என பண்டைய மக்களினலே போற்றப்பட்டு, வில்லவராயன் சின்னத்தம்பியின் வழித்தோன்றல்கள் வாழ்ந்த பேருராகும் இது. தொடர்து பல விநாயகராலயங்களை ஆக்கி இறுதியாகக் கல்வளை விநாயகர் கோவில் ஆக்கப்பட்டே மாருதப்புரவீரவல்லியின் குதிரை முகம்மாறிக் குஷ்டமும் நீங்கியது. மாவை முருகன் கோவில் வரலாறும் குமாரத்தி பள்ளம், மாவிழுதிட்டி பெருமாக்கடவை என்பன இந்தப் பெரும்பதியுடன் தொடர்பு படுத்தப்படுகின்றன. பழம் பெரும் புண்ணிய தலமாகச் சின்னத்தம்பிப் புலவர் அந்தாதியினல் வழிபாடு செய்துள்ளார். அழகிய கொன்றை மரம், பழைய நன்னீர்த் தீர்த்தம், பூஞ்சோலை என்பன இன்றும் காட்சி கொ ப்பதை எல்லோரும் காணலம். ஆகவே பாழடைந்த நிலையிலும் பொருள் பொலிந்து கொண்டே விளங்குகின்றது இப்பெரும்பதி.

முன்பக்கம் அழகிய நாகம்மை கோவில் ஆலயத்தின் முகப்பை அழகு செய்கிறது. பின்புறமாக ஒரு தனி அரசமரமும், தென்கீழ்த்திசையாகபெரும் அரசவிருட்சமும் விளங்குகின்றன. ஆலயத்தின் பின்புறமாக சண்டிருப்பாய்—அளவெட்டிக்குச் செல்லும் ரஸ்தா அமைகிறது. பண்டைக் காலத்திலே கோவில் உன்னத நிலையிலிருந்த பொழுது 'கோட்டதோட்டம்' என அழைக்கப்பட்டவளவு இன்று 'கோட்டா தோட்டம்' என உருமாறிக் காணப்படுகிறது. நல்லூர் முன்புறமாகசங்கிலித் தோப்புக்காணப்படுவதை இது நிகர்க்கிறது. பண்டைக் காலத்து இராசாக்கள் கோவில்களுக்கென சிறு தோட்டங்களைச் சாட்டுதல் செய்தனர். இதனல் ஆலயங்களில் பூசைகள், விழாக்கள் முறையே நடைபெற்றன. ஆனல் இன்று நிலைமை வேருகியுள்ளது. கோவில் சொத்து என எவரும் மனத்தில் எண்ணுது அபகரிக்க முற்பட்டுவிட்டனர்.

ஆலயத்தில் சிறிது காலமாக வருடாந்த விழாக்கள் தடைப்பட்டிருக்கின்றன. எனினும் ஆனிரோகிணி நட்சத்திரம் மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது. ஒரே ஒரு இறை அன்பர் சிறந்த முறையில் கதாகாலாட்சேபம், அபிஷேக ஆராதனைகள், இசைப் பாடல்கள், உபந்நியாசங்கள் முதலியவற்றைநடாத்தி பெருமானை எழுந்தருளச் செய்து அடியார்களுக்கு அருள்பாலிக்கச் செய்கின்ற

(10-ம் பக்கம் பார்க்க)

# சிறுவர் பூங்கா

## குரங்கு மாமா!

— செ குணரத்தினம் —

குரங்கு மாமா,
குரங்கு மாமா
கொஞ்சம் வாருங்க-
மரத்தில்
இறங்கி, ஏறித்
துள்ளிடாமல்
இங்கே வாருங்க!

இரவில் எங்கே
தூங்குவீர்கள்
என்று சொல்லுங்க-
மழை
இரவு, பகல்
பெய்தால் என்ன
செய்வீர் சொல்லுங்க!

மனிதன் வந்த
கதையை எந்தன்
மாமா சொல்லுங்க!
-நிலவை
கனியெனவே பறிக்க
முயன்ற
கதையும் சொல்லுங்க

எம்மைப் பற்றி
என்ன மாமா
எண்ணுகுறீங்க?
-வால்
இல்லையென்றால்
நீங்களுமோர்
மனிதனே மாமா!

உம்மைவிட
மனிதன் இங்கு
உயரவேயில்லை-
மாமா!
உங்க புத்தி,
குணத்தை, மனிதன்
மறக்கவேயில்லை!

என்ன மாமா,
என்ன மாமா
ஏங்கிப் போனீங்க?-
நான்
சொன்னவற்றைக்
கேட்டோ நீங்க
சொக்கிப் போனீங்க?

## கால்பந்தாட்டத்தின் பூர்வோத்திரம்

கால் பந்தாட்டத்தின் 1966-ம் ஆண்டு உலகக் கோப்பைக்கான இறுதிக் கட்ட ஆட்டங்கள் பிரிட்டனில் நடைபெற விருக்கின்றன.

கால்பந்தாட்டம் தோன்றிய நாடான இங்கிலாந்து இறுதி ஆட்டத்தில் ஆடத் தகுதி பெறக் கூடும் என்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. ஆனால் இங்கிலாந்தில் ஒரு காலத்தில் இவ் விளையாட்டுக்குத் தடை விதிக்கப் பட்டிருந்தது!

கால்பந்தாட்டம் பிரிட்டனில் ரோமானியர் காலத்துக்கு முன்னரே தோன்றி விட்டது, அப்போது அது "ஃபோலிஸ்" என்று குறிப்பிடப்பட்டது. அப்போது அது இப்போதுள்ளதைப் போலவே காற்றடைக்கப் பட்ட தோல் பந்தைக் கொண்ட ஆட்டமாகத் தான் இருந்தது. ஆனால் கீழே தரையைத் தொடாமல் பந்தை எவ்வளவு நேரம் உயரே இருக்கும்படி செய்வது என்பதே அப்போதைய விளையாட்டின் பிரதான நோக்கமாக இருந்தது.

### தெருவில் விளையாட்டு

ரோமானியர் காலத்துக்குப் பிறகு செஸ்டரிலும், டெர்பியிலும் கால்பந்தாட்டம் பெரிதும் தெருக்களில் தான் ஆடப்பட்டது. எனவே அது ஆட்டக்காரர்களுக்கும், ரோட்டில் செல்வோருக்கும் பெரிய ஆபத்தாக இருந்தது. அவர்களுடைய ஆட்டம் ஏதோ கலவரத்தில் ஈடுபட்டுள்ள இரு விரோதக் கும்பல் மோதுவது போல இருந்தது.

சாதாரணமாக இந்த மோதல்களில் பலருக்குக் காயம் ஏற்படுவதுண்டு, வழக்கமாக ஆட்டம் நடுப் பகலில்தான் ஆரம்பிக்கும். பந்தை நடுவில் வைத்து சம்பிரதாயமாக முதல் உதை கொடுப்பது மட்டுமே ஆட்ட விதிமுறையாக இருந்தது. அதற்குப் பிறகு ஒரே அடிபிடி சண்டைதான். ஆட்டம்பல மணி நேரம் நடக்கும். புத்திசாலிகளான வீட்டுக்காரர்கள் கதவுகளையும் யன்னல்களையும் சாத்திக் கொண்டு வெளியே தலைகாட்டாதபடி இருப்பார்கள். துணிச்சல் கொண்டவர்கள் தான் தெருக்களில் நடமாடத் துணிவர்.

1531-ல் சர் தாமஸ் எலியாட் கால் பந்தாட்டத்தைக் கண்டபோது "மிருகத்தனமான வெறி கொண்டதும், காயம் விளைவிக்குமளவுக்குக் கடும் பலாத்காரத்தைக் கொண்டதும் இதைத்தவிர வேறு ஒன்றுமில்லை" என்று கால் பந்தாட்டம் பற்றி அவர் எழுதி வைத்தார்.

டூடர் மன்னர்கள் ஆட்சிக் காலத்து வரலாற்று ஆசிரியரான ஸ்டப்ஸ் கால் பந்தாட்டம் பற்றி வருணித்ததாவது:-

"இது முதுகையும் கழுத்தையும் ஒடிக்கும் ஆட்டமாகும். ஆட்டக்காரர்கள் வேண்டுமென்றே கடினமான தளக்கற்கள் மீது தூக்கி எறியப்படுகின்றனர். ஆட்டக் காரர்களை வேண்டுமென்றே காயப்படுத்துவதற்காக அல்லது சாகடிப்பதற்காக மற்றவர்கள் இருதயப் பகுதியில் கைகளாலும், முழங்கையாலும் குத்துகின்றனர்"

### தடை

எட்டாம் என்றியும், முதலாம் எலிசபெத்தும் இந்த ஆட்டத்தை ஒரேயடியாக ஒடுக்கத் தங்களால் முடிந்த வரை நடவடிக்கைகளைமேற் கொண்டனர். ஒருவர் தனது நிலத்தில் கால்பந்தாட்டம் நடத்த அனுமதித்தால் அது கொடியகுற்றமாகும் என்று அறிவிக்கப்பட்டது. ஆட்டக்காரர்கள் அப்படி வந்து விளையாடினால் அந்த இடத்தின் சொந்தக்காரர்கள் தங்களுக்கு ஒன்றுமே தெரியாதது போல வீட்டுக்குள் இருந்தனர். எப்படியோ இந்த ஆட்டம் தப்பிப் பிழைத்து நீடித்தது, இப்போதோ பல வகையான விதிமுறைகள் ஏற்பட்டு இந்த ஆட்டத்துக்கு உலகெங்கிலும் பல கோடி அபிமானிகள் உள்ளனர்.

உலகில் சுமார் ஒன்றரை லட்சத்துக்கும் அதிகமான கால் பந்தாட்ட சங்கங்கள் இருப்பதாக மதிப்பிடப் பட்டுள்ளது. கால்பந்தாட்டத்தைத் தொழிலாகக் கொண்ட ஆட்டக்காரர்கள் 5 லட்சத்துக்கும் அதிகமாக இருக்கின்றனர், அமெச்சூர் ஆட்டக்காரர்களின் எண்ணிக்கை 70 இலட்சத்துக்கும் அதிகமாகும். 18 வயதுக்குக்குறைந்த ஜூனியர் ஆட்டக்காரர்கள் சுமார் 20 இலட்சம்பேர்உள்ளனர், இங்கிலாந்தில் மட்டும் சுமார் 30,000 கால்பந்தாட்டச் சங்கங்கள் உள்ளன.

## வளையல்

— வி எஸ் பாலசிங்கம் —

வட்ட வட்ட வளையல்
வடிவான வளையல்
சின்னச் சின்ன வளையல்
சிங்கார வளையல்

○

பலவர்ண வளையல்
பாலரணியும் வளையல்
கல கலென்று ஒலிக்கும்
கண்கவரும் வளையல்

---

இராமு: என்னடா, வெகு நேரமாகத் தண்ணீரில் தேடிக் கொண்டிருக்கிருய்?

சோமு: ஐஸ்கட்டியைப் போட்டுவிட்டேன், அது தான் தேடிக்கொண்டிருக்கிறேன்.

அனுப்பியவர்:
கி. மோகன்தாஸ்,
மாசியப்பிட்டி.

* * *

நண்பர்: வேலைபோய்விட்டதாமே, ராமுவுக்கு! என்ன காரணமோ?

மற்றவர்: ஆமாம், எல்லாம் வித்தியாசம் தான்!

நண்பர்; ஏன் அவனுக்கும் முதலாளிக்கும் ஏதாவதுவித்தியாசமோ?

மற்றவர்: இல்லை, இல்லை. கணக்குப் புத்தகத்துக்கும் பணப்பெட்டிக்கும்தான்வித்தியாசம் இருந்ததாம்!

# மங்கையர் உலகம்

## மனை அக விளையாட்டுக்கள்

— கற்பகம் —

எவ்வித அடுக்குகளும் இல்லாமலே மிகவும் எளிதாக ஆடக்கூடிய பல விளையாட்டுக்கள் உள்ளன. இவற்றுள் ஒன்றே "நாயும் புலியும்" நாய்கள் ஒன்று சேர்ந்து பொல்லாத வேங்கைகளுக்கு இரையாகாமல், அவைகளை அடைப்பதிலேயே வெற்றி கிட்டும். என்ன? நாய்களாவது வேங்கைகளை வெற்றி கொள்வதாவது என மலைக்காதீர்கள். விளையாட்டென்றல் இதுவும் நடக்கும் இன்னமும் நடக்கும். நாய்கள் தன்னந்தனியாகச் சென்றல் அந்தப் பொல்லாத புலிகள் பாய்ந்து கொன்று விடும். பயந்து பயந்து, ஒதுங்கி ஒதுங்கி, கூட்டங் கூட்டமாக நாய்கள் ஓடும். ஆனல் அவை சூரத்தனமாய் புலிகளைப் பாயவிடாது தடுக்கலாம். புலிகள் அடைபட்டு விட்டனவா? இதோ, ஆட்டமும் முடிவடைந்து விட்டது. விளையாட்டைப் பார்த்தால் இதன் 'ருசி' தெரியும்.

ஒரு தரம் கீரிமலை போய் வந்தால் எத்தனையோ தடவை 'எட்டு' ஆடிக் கொள்வதற்கு வேண்டிய காய்கள் சேர்ந்து விடும். வீட்டிலே, சிறுவர் மட்டுமல்ல, பெரியோரும், முதியோரும் கூட சேர்ந்து விளையாடக் கூடிய விளையாட்டு இது. தம்பிக்குக் காய்கள் நாலு ஊரி, தங்கைக்கு அழகான சிப்பி. அக்காவுக்கு வெறும் வெள்ளைக் கல். அப்பாவுக்கோ கருங்கலுத்தான். இனி விளையாட வேண்டியதுதானே? நாலு சோகியும் கவிழ்ந்து விழுந்தால் 'எட்டு'ப் புள்ளிகள். நிமிர்ந்து விழுந்தால் நாலு. தனியாக ஒரு சோகி நிமிர்த்து விழுந்தால் தாயம். இந்த அற்புதமான விளையாட்டை ஆட கீரிமலை போக வேண்டுமே என நினையாதீர்கள். வீட்டிலேயே இரண்டு புளியங் கொட்டையைப் பிளந்தாற் சரியாகி விடுமே.

சிறிதே வளர்ந்தவர்களுக்கு கடற்கரையிற் பொறுக்கிய சிப்பி என்னத்தைக் காணும்? அவர்கள் மரத்தைச் சீவி அதில் எண்களைப் பொறித்து ஆடுவார்கள் சோநாலுஎன்றழைக்கப் படும் அவர்கள்விளையாட்டு.

யானைத் தந்தத்தில் புள்ளிகள் அச்சடித்துச் சொக்கட்டானும் ஆடிக் கொள்வார்கள். இதுவே முற்காலத்தில் மன்னர்கள் விரும்பி ஆடிய விளையாட்டு. தருமன் சதுரங்கம் ஆடி தன்னையும் சகோதரரையும், ஏனைய உடைமைகளையும் துரியோதனுதியோருக்கு இழந்தது எல்லோரும் அறிந்த பழங் கதை,

விளையாட்டுக்களில் 'பல்லாக்குழி' யென்றல் பெண்ணுலகத்தில் அதற்குத்தனிச் சலுகை. அளாப்பித் தந்திரமாக வெற்றி பெறுவதற்கு சிறந்த வாய்ப்பு. குழிக்குள் லாவகமாக எத்தனை கொட்டைகளையும் போடலாம் யார் காணப்போகிருர்?

இப்போ கடையில் வாங்கி விளையாடிக் கொள்ளக்கூடிய பல விளையாட்டுக்கள் உள்ளன. "பாம்பும் ஏணியும்" "லூடேக்" போன்றவை எந்தச் சிறு பிள்ளைகளுக்கும் தெரியும்.

"கிரிக்கெட்" விளையாட்டைப்பற்றித் தெரியாத குழந்தையில்லை. இன்றைய சமுதாயத்திலேபிரபலமான விளையாட்டு இது, வெளியரங்கில் விளையாடப்படும் இவ்விளையாட்டை வீட்டிலிருந்தே ஆடலாம் என்றல் விந்தைதானே? பெயர் பெற்ற ,டெஸ்ட் மாட்ச்' சுகளையெல்லாம் வீட்டிலேயே திறம்பட நடத்திக் கொள்ளலாம். பிரசித்தி வாய்ந்த 'கிரிக்கெட்' வீரர்களெல்லாம் தம்பியினுடைய கையிலகப்பட்டுத் திண்டாட வைக்கலாம். ஆச்சரியப்படுகிறீர்களா? இதையே "புத்தகக் கிரிக்கெட்" எனக் கூறுவார்கள். ஒருவராலேயே வெற்றிகரமாக விளையாடி மகிழலாம்.

இப்படி இன்னும் எத்தனை எத்தனையோ உள்ளன. இவற்றினல் தாய்மார்களுடைய பிரச்சினைகளும் தீர்ந்து, தம்பி தங்கைகளுடைய விடுதலையும் சந்தோஷமாகக் கழியும் என்று சொல்லவும் வேண்டுமா?

### சவ்வரிசி

சவ்வரிசியைப் பாகாசத்திலே போட்டுக் குடிக்கிருர்கள். கஞ்சி காய்ச்சிக் குடிக்கிருர்கள். கூழ், வடகம், பிஸ்கட் கூட சவ்வரிசியிலிருந்து செய்கிருர்கள். இந்த சவ்வரியின் பூர்வோத்திரம் மரவள்ளிக் கிழங்கு என்றல் உங்களால்நம்பமுடிகிறதா? ஆனல் அதுதான் உண்மை. இந்தியாவில் சேலம் ஜில்லாவும், கேரளமும் சவ்வரிசித் தொழிலுக்குப் பெயர் பெற்றவை. சேலத்தில் பத்தாயிரம் ஏக்கர் நிலத்திலே மரவள்ளிக் கிழங்கு பயிரிடுகிருர்கள். ஏக்கருக்கு 1500 ரூபா விவசாயிக்குக் கிடைக்கிறதாம். சவ்வரிசி உற்பத்தித் தொழிலில் 30 ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்கிறது. சேலத்தில் மட்டும் 150 தொழிற்சாலைகள் உள்ளன. மரவள்ளிக் கிழங்குகளை தோலை உரித்ததும் வெள்ளை வெளேரென இருக்கும். இதை ஊறப்போட்டு அடித்து மாவாக்கி மறுதரம் மாவைத் தண்ணீரிலே கரைத்து பிட்டுக்கு குழைப்பது போன்று உழக்கிப் பிசைந்து சவ்வரிசி குருணைகளாக எடுக்கிருர்கள்.

'செங்காந்தன்'

### சமயல்கலை

## சீனி சம்பல்

சுலபமாகச் செய்யக்கூடிய உணவுவகைகளுள் சீனி சம்பலும் ஒன்று. தொடர்ந்து பல நாட்களுக்குப் பழுதாகாது வைத்துக்கொள்ளலாம். அதனல் தூர நாடு செல்வோருக்குக் கொடுத்து விட உகந்தஉணவுப்பதார்த்தமாகிறது. இதைவிடச் சீனிச்சம்பலின் தனிச்சிறப்பு அது ரொட்டி தோசை,அப்பம், ஏன் சோற்றுடனுமே கலந்துண்ணுக்கூடியதன்மையில் இருப்பது.

தேவை:

(1) 1 இரு. வெங்காயம்.
(2) 20 பச்சைமிளகாய்.
(3) 1 தேங்காய்.
(4) சிறிதளவு கருவேப்பிலை, கறுவா, ரம்பை, சேரை, பூண்டு, பழப்புளி, விணுகிரி, மிளகாய்த் தூள்.
(5) 2 மேசைக் கரண்டி சீனி.

வெங்காயத்தை மெல்லிசாக வெட்டவும். மிளகாயை சிறிதுசிறிதாக நறுக்கவும். முதலில் வெங்காயத்தை எண்ணெயில் போட்டுத் தங்க நிறமாகும்வரை பொரிக்கவும். பின்னர்அதே எண்ணெயில் மிளகாயையும் போட்டுப் பொரிக்கவும். அதனை எடுத்த பின்னர் கறுவா, கருவேப்பிலை, ரம்பை, சேரை, பூண்டு என்பனவற்றை ஒருமுறை எண்ணெயில் போட்டு எடுக்கவும். இவற்றையெல்லாம் ஒரு வடியிலோ அல்லது பேப்பரிலோ போட்டு எண்ணெயை வடியவிடவும்.

பழப்புளி அளவுக்கெடுத்து விணுகிரியில் கரைத்து உப்பும் போடவும். இதனைச் சட்டியில் ஊற்றி, 1 தேங்காயிலிருந்துபிழிந்தெடுத்த முதற் பாலையும் அதனுள் விட்டுக் கலக்கவும்.

ஒருமேசைக்கரண்டி அளவு எண்ணெயை கொதிக்க வைத்து அதனுள் பொரித்தவைகளைப்போட்டு மெல்லிய சூட்டில் வைக்கவும். எண்ணெ வற்றியபின் புளியுடன் கலக்கப்பட்ட பாலை ஊற்றவும். அதன் பின் உருசியின்படி மிளகாய்த் தூளையும் போடவும். இதனைச் சுமார் 15 நிமிடங்களுக்குஅடுப்பில் இலேசாகக் கொதிக்க வைக்கவும். பாலெல்லாம் வற்றி சம்பலின் மேல் தளத்தில் எண்ணெ தோன்றத் தொடங்கும் போது அடுப்பிலிருந்து இறக்கவும். இறக்கியபின் சீனியைப்போட்டு நன்முகக் கிண்டிவிடவும்.

— க

**மனிதனுடைய வாழ்விலே வாலிபம் என்பது வசந்தம் போல; வசந்தம் வந்ததும் மலர்கள் பூத்துச் சொரிகின்றன. வாலிபத்தில் ஒவ்வொரு உள்ளத்திலும் கற்பனைகளும், வாழ்க்கைக் கனவுகளும் மலர்ந்து மணம் வீசுகின்றன.**

**அந்தச் சுகானந்தக் கனவுகள் நிறைவேறும் இன்ப நாளை இளம் இதயங்கள் எத்தனை ஆவலுடன் எதிர் நோக்கிக் காத்திருக்கின்றன...**

# இது கனவுலகம்!

— எஸ். சண்முகநாதன்

நான் பிறந்த மண்ணின் அணைப்பில் புரண்டு வரும் அந்தக் கள்ளி ஆற்றின் தெள்ளிய நீர் என் கால்களைத் தொட்டுத்தழுவிச்சென்றபோது என் உடலும் உள்ளமும் சிலிர்த்தன. வாழ்வின் எதிர்காலம் பற்றிய சிருங்காரக் கற்பனைகளை மனதில் மலர வைத்தது. நெஞ்சில் இலட்சிய வெறியை ஊட்டிய அந்த ஆற்றின் மணற்கரையை என்னால் மறக்க முடியாது.

கள்ளி ஆறும், அதன் மணற் கரையும், கரையை அடைத்துக் கொண்டு நிற்கும் ஈச்சம் புதர்களும் தூரத்தில் ஒற்றை மரமாய் தனித்து நிற்கும் அந்தப் பெரிய பூவரசும் என் கண்களில் படும்போதெல்லாம் நான் கற்பனைச் சுகத்தில் கனவு காணுவேன்.

அறிவறியாப் பருவம் முதல் ஆடிவிளையாடிய சலப்பு ஓசையிடையே நின்றுகொண்டு பார்க்கும் போது நான் என்னையே உணர்கிறேன். என் கனவுகளுக்கும், கற்பனைகளுக்கும் மூல காரணமாய் இருந்தவள்தான் இதயத்தில் எழில் உருவமாய் கொலு வீற்றிருந்தவள் என்பதை நினைக்கும்போது நெஞ்சில் மகிழ்வும் வேதனையும் குழம்பிக் கலங்குகின்றன.

உலகம் தெரியாத அந்தக் காலத்திலேயே நான் அறிந்து தெரிந்துகொண்டிருந்தது, கள்ளி ஆறும் அதன் கரையும் பூவரச மரமும்தான். அத்துடன் உள்ளத்தில் உருவான ஓர் இயற்கையான பிணைப்பால் அடுத்தவீட்டுப் பூரணியின் மேல் எழுந்த அன்பையும் நான் அறிந்திருந்தேன்.

அவள் என்தோழி. இயற்கையில் என்னை மறந்திருக்கும்போது, சுற்றுப்புறத் தையும் சூழலையும், கற்பனையைக் கடந்த வெளியுலக வாழ்க்கையையும் எனக்கு நினைவூட்டிக்கொண்டிருந்தவள் அவள் தான். கற்பனைச் சுகத்தில் தவித்துக்கொண்டிருந்த என் உள்ளத்திற்கு அவளின் அன்பு அரவணைப்பு தேவையாய்ப்பட்டது.

காற்றில் அலைந்துகொண்டிருக்கும் பூங்கொடிக்கு பின்னிப் படர்வதற்கு ஒரு கொம்பு தேவைப்பட்டது. வானவெளியில், அந்தரத்தில் கற்பனைச்சுகத்தில் சிறகடித்துப் பறந்துகொண்டிருந்த நான், அந்தச்சுகத்தில் இருந்து சிறிது விடுபட்டு ஆறுதல் கொள்வதற்கு அவளின் நிழல் தேவைப்பட்டது. கற்பனைகளில் காணமுடியாஉலகை, குரோதமும், போட்டி பொறாமையும், சிறுமையும் கொண்ட உலகை அவள் காட்டும்போதுதான் கூசிக் குறுகிப் பார்த்திருக்கிறேன்.

நான் கனவு கண்டுகொண்டிருக்கும் உலகத்திற்கும் நடைமுறை வாழ்க்கைக்கும் எவ்வளவு வித்தியாசம். நான் கண்ட கனவுகள் கற்பனை தானா...?

கனவுக்கும் கற்பனைக்கும் இடையே நடைமுறை வாழ்க்கை தலை நீட்டும் போது, என் உள்ளம் உலகத்தையே வெறுத்து, வேதனையில் சாம்பும் இதயத்தின் ஆவேசத்தை புதுப் புதுக் கனவுகளில் காணமுயலும் போது அதற்கு அவள் உடந்தையாக இருந்து, மழைத் தூறல் விழுவது போல், மலர் சொரிவது போல் அணைத்து ஆறுதல் தந்து அரவணைத்து உலகத்திற்கும் எனக்குமிடையே நின்று நான் காண மறுத்த, வெறுத்த உலகத்தை எனக்காக மறைத்துக்கொண்டு அதன் தாக்கம் என்மீது விழாமல் பார்த்திருக்கிறாள்.

அவள் தான் பூரணி!

அந்த மணற்கரையும் அணைத்து மகிழ்ந்த ஆற்றின் தண்ணீரும் வாழ்வில் மறக்க முடியாதவை. என்னை வளர்த்த ஆற்றின் பெருவெளியில் தனித்து நின்று நிழல் தந்த பூவரச மரத்திற்கு நான் பொழுதுபோவதே தெரியாமல் துணை இருந்திருக்கிறேன்.

வாழ்வைக் கற்பனைகளிலேயே கழித்துவிடும்மனதை கடவுள் எனக்குக் கொடுத்திருக்கிறார். வெளி உலகின், புறவாழ்வின் தழும்புகள் படியாமல், எதற்காகவோ ஏங்கித்தவிக்கும் என் இதயத்தில், அந்த ஆற்றின் இயற்கைச்சூழலும் நான் பிறந்த மண்ணின் பற்றும் புதுப்புதுக் கற்பனைகளை மலர வைத்தன. மலர்ந்த அந்தக் கற்பனைகளில் நான் அவைகளை வாழவைத்திருக்கிறேன்.

என் மனதின் கற்பனைகளில் எல்லாம் என்னையே அறியாமல் இதயத்தின் லட்சிய வேட்கை தானே அமைத்துக்கொண்ட இயற்கையின் அழகு எல்லாம் கூடிய ஓர் எழில் உருவை என்னையே அறியாத உணர்வில் நான் கண்டுகொண்ட போது அந்த உருத்தெரியா அழகின் வடிவை நெஞ்சின் புனிதமான உணர்வில் வழிபடத்தொடங்கினேன்.

இப்போது அந்தப் பெருவெளியின் அலையின் சல

என் உள்ளத்திற்குத் தேவையான, நான் சிருஷ்டிக்க விரும்பும் உலகத்திற்குத் தேவையானவைகளுக்காக அவளின் உதவி சதா தேவைப்பட்டது. அவளின் உறவும் உள்ளத்து அன்பும் இல்லாமல் என்னால் கனவு காணமுடியாது, கற்பனை செய்ய முடியாது, என்னால் வாழவேமுடியாது என்ற நிலையை நான் உணர்ந்துதெளிந்தபோது—

அவள்மீது நான்கொண்ட அன்பிற்கும் என்னையே அறியாமல் உள்ளத்தில் எழிலுருவாய் அமைந்து நிற்பதற்கும் அவள் என்மீது கொண்ட பாசத்திற்கும் எந்தச் சக்தி மூல காரணமாய் அமைந்தது என்பது தெரியாமல் திணறினேன்.

அவள் என்னுடனேயே பிறந்தாள். என்னுடனேயே வளர்ந்தாள். கள்ளமில்லா உள்ளம் கொண்டு உறவாடினாள். சிறு பிராயத்தில் நானும் அவளும் சேர்ந்து புது உலகத்தைப் பற்றிய கனவும் கற்பனையும் கண்டு மயங்கித் திரிந்ததைப் பார்த்த என் தாயும், அவள் தாயும் வேடிக்கையாகப் பேசி, பரிகாசம் செய்து எங்களுக்குள் ஓர் உறவை அவர்கள் தாங்களாகவே சிருஷ்டி செய்து சொல்லிச் சிரிக்கும்போது நானும் அவளும் புரியாமல் புரிந்ததுபோன்ற பாவனையில் நாணி மருண்டு ஓடியதை நினைக்கும்போதெல்லாம் என் நெஞ்சம் மகிழும். ஏன்—?

காலம் ஓடியது.

கள்ளி ஆற்றின் நீர் வற்றியும், புது வேகத்தோடு பெருகியும் செல்லும். அலையரித்த மணல் மீண்டும் கரையில் சேரும். அந்தப் பூவரச மரமும் பூத்து உதிர்த்து, அதன் நிழல் தேடிச்செல்லும் எனக்குப் பட்டு மெத்தை விரித்து வைத்திருக்கும்.

காலத்து மாற்றத்தின் போக்கில் அவளிடம் நான் எத்தனையோ மாற்றங்களைக் கண்டேன். அரும்பாகி, மொட்டாகி, இதழ் விரித்து மணம் பரப்பும் எத்தனை விந்தையானது மலர்—?

என் பூரணியும் மலரும் ஒன்றா?

மலரின் அழகையும், அதிசயத்தையும் நான் அவளிடத்தில் ஒருங்கு கண்டேன். மென்மையான அவளின் பொன்னிற மேனியில் துறுதுறுவெனப் புரண்டு கயலாகத் துள்ளும் நீண்ட விழிகளும், செம்மாதுளை பிறந்தது போன்ற துடிதுடிக்கும் இதழ்களும் என்னைக் கவர்ந்தன. என்னுள் ஊறிய ஏதோஒரு வெறிக்கு, கனவு காணும் வேதனைக்கு அவளின் அழகு தூபமிட்டது.

வானத்தில் பிறை நிலா சிரித்துக்கொண்டிருக்கும். தரையில் பொன்னுகை மின்னும் மணல்போல் நட்சத்திரங்கள் கொடிகொடியாய்ப் பூத்துக் குலுங்கும். பாலாகப் பொழியும் ஒளி வெள்ளம் என்மீது படாமல் பூவரசின்கிளைகள் குடைபிடிக்க நான் அதனடியில் கற்பனை செய்யும் கனவுச் சுகத்தில் மயங்கிக் கிடப்பேன்.

கனவு மயக்கத்திலும் என் உள்ளம் ஆவலால் துள்ளிக்கொண்டிருக்கும். கற்பனைச் சுகத்திலும் என் விழிகள் தூரத்தில் எதையோ தேடி அலைந்துகொண்டிருக்கும். வேதனையின் சலிப்போடு வானத்து நட்சத்திரப் பூக்களைக் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருக்கும்போது இரண்டு பனிமலர்க் கரங்கள் பார்வையை மென்மையாய் மூடி மறைக்கும்போது, நான்கொள்ளும் மகிழ்வும் நிறைவும் சொல்லமுடியாதன.

அந்த மென் கரங்களைப் பற்றி இழுக்கும்போது, புயலில் அறுந்த பூங்கொடியாக அவள் என் மடியில் விழ, நான் கண்ட கனவுகளெல்லாம் முழு உருவம் பெற்று என் மடியில் தவழ்வெளியும், வானத்து நிலவும் எங்களுக்கு நிழல்தந்த பூவரசமரமுந்தான் அறியும்.

எதிர்காலத்திலே வாழ்விலே ஒன்று சேரும் அந்த நாளை, வசந்தத்தை எத்தனை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தோம்.

மனிதனுடைய வாழ்விலே வாலிபம் என்பது வசந்தம் போல. வசந்தம் வந்ததும் மலர்கள் பூத்துச் சொரிவதைப்போல வாலிபத்தில் ஒவ்வொரு உள்ளத்திலும், கற்பனைகளும் வாழ்க்கைக் கனவுகளும் மலர்ந்து மணம் வீசுகின்றன.

அந்தச் சுகானந்தக் கனவுகள் நிறைவேறும் இன்ப நாளை இளம் இதயங்கள் எத்தனை ஆவலுடன் எதிர் நோக்கிக் காத்திருக்கின்றன.

நானும் அவளும் காத்திருந்தோம்.

ஒரு கிழமையாக அவள் என்னைத்தேடி வரவில்லை. இரவின் தனிமையில் நான் எண்ணாததெல்லாம் எண்ணி ஏங்கித் தவித்தேன். அந்த மணற் பெருவெளியில் நினைவின்றி கால்கள் புதைய நடந்து களைத்தேன். வானத்து நட்சத்திரங்களை வெறுப்புடனும், ஏக்கத்துடனும் எண்ணிச் சலித்தேன்.

அவள் என்னைக் காண வராத அந்தநாட்களில் என்னுடன் சேர்ந்து இரவும், நிலவும் வேதனைப்பட்டன. வெம்பி கண்ணீர் வடித்தன.

அன்று அவள் வந்தாள், ஆனந்தம் மலரும் முகம் வாடி வதங்கிப் பொலிவிழந்திருந்தது. கனவின் மயக்கம் சுடர் விட்டுக்கொண்டிருக்கும் அவளின் நீண்ட விழிகள் அழுது நலுங்கிப் போயிருந்தன. அவளைக் கண்டவுடன் போன என் உயிர் மீண்டது. ஆனால் அவளின் நிலையைக் கண்டவுடன் மீண்டும் போய்விட்டது.

பூரணிஎன்மடியில் வீழ்ந்து சிறிதுநேரம் குழந்தைபோல குலுங்கிக் குலுங்கி அழுதாள். தன் கண்ணீரால் என் நெஞ்சை நனைத்து அதிலே மலரும் நினைவுகளை மங்கவைத்தாள். அவளின் கண்ணீர் இதயத்தைக் கடல் போலக் கொந்தளிக்கவைத்தது.

அவள் என்முகத்தைக் குழந்தைபோன்று ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தாள். ஆசையுடன் இரு கைகளாலும் தடவி அணைத்துச் சுகம் கொடுத்தாள்; நான் ஒன்றும் விளங்காமல் அவளின் செயல்களில் குழந்தையாகிக் குழைந்தேன்.

"என்மேல் கோபமா... இத்தனை நாளும் வராமல் ஏமாற்றிவிட்டேன்... உங்கள் மனம் என்னபாடு பட்டிருக்கும், உயிர் துடித்திருக்கும்... நான்... பாவி..."

## ஞாயிறு இரசனைக் கதை

வதாக என் இதயம் உணரும். அந்த இனிய நினைவால் நான் இந்த உலகையே மறந்துபோவேன்.

அவளின் நீரின் சலசலப்பைப்போன்ற கலகலவென்ற சிரிப்பொலிதான் மீண்டும் இவ்வுலகிற்கு என்னைக் கொண்டுவரும்.

காலம் போவதே தெரியாமல் கனவு மயமான வாழ்க்கைக்கு வேண்டிய கற்பனைகளையெல்லாம் கதைத்துக்கொண்டிருப்போம். எத்தனைவகையான கனவுகள்; கற்பனைகள்; நினைவுகள். உலகம் முழுவதும் எங்களுக்கே சொந்தமென்ற நினைவில் நாங்கள் கட்டிய இன்பக்கோட்டைகள் தாம் எத்தனை.

எங்கள் இருவரின் இதயங்களும் கண்ட கனவுகளையும், கற்பனைகளையும் கள்ளி ஆற்றின்பரந்த மணல்

நான் கேட்டுக்கொண்டிருந்தேன். நான் பட்ட பாட்டைவிட, என் இதயம் அடைந்த வேதனையை விட அவளும் அவளின் உள்ளமும் அடைந்த துன்பத்தை அவளின் வார்த்தைகள் மூலம் அறிந்து கொண்டவுடன் என் இதயம் சற்று லேசாகியது.

"அது சரி... நீ... ஏன் வரவில்லை....?"

அவள் சிறிதுநேரம் பேசாமல் இருந்தாள், நெஞ்சத்தில் ஓடும் நினைவுகளை என்னால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. வாழ்வில் அந்தக்கணத்தை நான் வேதனையுடன் கழித்தேன்.

"எவ்வளவு கனவுகள் கண்டோம்... எத்தனை ரம்மியமான கற்பனைகள் செய்தோம்... எல்லாம் எதிர்

(9ம் பக்கம் பார்க்க)

"லேடன்" LEYDEN

தயாரிப்புகள்:-

● பெனியன்கள்
● ஸ்போட் சேட்டுகள்
● ரீ சேட்டுகள்
● கால் மேசுகள்
(Nylon & Cotton)

லேடன் இன்டஸ்றீஸ் லிமிடெட்

7, ஆஸ்பத்திரி வீதி :: யாழ்ப்பாணம்.

# வானத்தாமரை

— 9 —

காற்றிலே ஆடியலைந்த யன்னல் ஒருமுறை ஓங்கியடித்தது. வெளியே பெய்து கொண்டிருந்த மழையின் ஒரு பகுதியை உள்ளே அள்ளிக் கொட்டிவிட்டு ''உய்'', என்ற ஒலியுடன் வீசி ஓய்ந்தது பேய்க்காற்று. தூக்கம் வராது கட்டிலிற் புரண்டு கொண்டிருந்த சிவலிங்கம் எழுந்து யன்னலைச்சாத்தினான். இடியைப் பின்னுற் சுமந்து வந்த மின்னலொன்று அவன் கண்களைக் கூசச் செய்துவிட்டுச் சென்றது. அந்தமின்னல் வெளிச்சத்திலே மழையிலேகுளித்து மகிழ்ந்து கொண்டிருந்த மலைகளும் மரங்களும் பளபளத்தன.

திரும்பவும்வந்துகட்டிலில் அமர்ந்து கொண்டான். உள்ளத்தில் பொங்கிக்கொண்டிருந்த வேதனைகள் மனதை அலையவைத்துக்கொண்டிருந்தன. அதே நேரத்தில் உடலின் மயிர்க்கண்களை வழியாக்கி, இரத்த நாளங்களில் புகுந்து வேதனை தந்து கொண்டிருந்த குளிர்வேறு தொல்லைகொடுத்தது. துன்பமயமான இந்த உலகத்தின் வேதனைகள் யாவும் ஒன்று திரண்டு அவனை உலகத்தை விட்டு விரட்டுவதற்குக் கங்கணம் கட்டிக்கொண்டிருந்தன போல் அவனுக்குத் தோன்றின. அந்த இருட்டில் கண்ணுக்குத் தெரியாது, அவனை மழையினிலும், காற்றிலுமிருந்து காத்த கூரையை நோக்கிக் கண்களைச் செலுத்தியவாறு கட்டிலிற் சாய்ந்தான்.

கதிர்காமக் கடவுளிடம் அவன் பெற்ற சாந்தியைத் தட்டிப்பறித்து விட்டார் வள்ளிமலைச் சாமியார். அவர் சொன்னவார்த்தைகள் அவன் தன் வாழ்வுக்கு வகுத்திருந்த புதிய வழியைத்தூக்கியெறிந்து விட்டதுமன்றி, மனதை வாட்டும் வகையில் கோரத்தாண்டவம் வேறு ஆட ஆரம்பித்தன.

அந்தச் சாமியார் சர்வ லோகமாகமமும் உணர்ந்த ரிஷியோ அல்லது வெறும் கஷாயத்துக்குள் புகுந்து கொண்ட வேடதாரியோ? ஆனால் அவரின் வார்த்தைகள் மட்டும் அவனுக்கு உண்மையாகத் தோன்றின. ஒருவேளை அவை பொய்யாக இருக்கும் என்று நினைக்கும் பொழுது, ஏதோ பாவகாரியத்தைச் செய்வது போல் மனம் கூசினான்.

அந்த நிம்மதியற்ற உடலையும் அதில்தாங்கி நிற்கும் உள்ளத்தையும் ஆற்றுநீரில் கரைத்து விடலாமென்றால் அதற்கு அவனுக்குத் துணிவே வரவில்லை. ஆனால் 'தற்கொலை செய்வது கோழைத்தனம்' என்று

குறுநாவல்

யாரோ சொன்னதைத் தனக்குச் சாதகமாக்கி தன் பயந்த தன்மையைத் தன்னுள்ளத்துக்கே வீரமாகக் காட்டமுயற்சி செய்தான். வாழ்வைஎதிர்த்துப் போராட வேண்டும் என்று அவன் நினைக்கும் பொழுது ஏற்படும் வீரம் யாவும், கவலைப்படுவதுடன் நின்றுவிடுவதை அவன் உணர்ந்து கொண்டாலும், தொடர்ந்து செயற்பட முடியாமல் ஏதோ சக்தி அவனைப் பின்னின்று இழுத்துக் கொண்டிருந்தது. வாழ்வின் நெருக்கம் நிறைந்த பகுதிக்குள் தள்ளப்பட்ட பொழுது, எதுவும் செய்யத் திறனற்ற பேடியாக வாளாவிருந்தான்.

புண்பட்ட நெஞ்சத்தின் வலி ஓயாடுங்குமட்டும் பேராதனையின் பக்கமே வருவதில்லையென்று தான் தீர்மானித்திருந்தான். ஆனால் வயிற்றுக்கும், வாழ்வுக்கும் அவனின் அந்த முடிவு பிடிக்கவில்லை; கழுத்துப் பிடியில் கொண்டுவந்து பேராதனைப் புகைவண்டி நிலையத்தில் தள்ளிவிட்டன. அவனே நேராகத் தன்னறையை வந்தடைந்தவன், சாப்பிடக்கடைக்குச்


— நா. யோகேந்திரநாதன் —

சென்றதைத்தவிரவேறு எங்கும்வெளியே போகவேயில்லை. இயற்கையின் மடியிலேபடுத்துக்கிடந்து இன்பஸ்பரிசத்தை வித விதமாக நுகர்ந்தவன், மலையுச்சியையும் மலர்ச்செடிகளையும் மனதாற் கூட நினைத்துப் பார்க்கப் பயந்தான். அவற்றை நினைக்கும் பொழுதெல்லாம் அவற்றிடையே ஓடித்திரிந்த சாருகேசி கண்ணுக்குள் வந்தாள். அவளைச் சிரமப்பட்டு நினைவிலிருந்து நீக்கிவிட்டு இயற்கைத் தாயின் எழிலைச் சுவைக்க ஆரம்பிக்கும் பொழுது, கவிதை கேட்ட சந்திரமதி அருகில் தோன்றினாள். அந்தக் கன்னிகளின் நினைவை மறப்பதற்காக அவன் இயற்கைத் தாயைக் கூட மறக்க வேண்டியிருந்தது.

அந்தக் கவிஞன் இயற்கைத்தாயின் மேற்கொண்ட நிலைவு மறந்த நிலை அவளுக்குப் பெருங்கோபத்தைக் கொடுத்திருக்கவேண்டும். மழையையும் காற்றையும் அனுப்பி அவனைத் தண்டிக்க ஆரம்பித்தாள். ஆனால் அவனோ நெஞ்சக் காயத்தை நீவி விடுவதைப் பற்றி நினைத்தானேயன்றி, குளிரையோ, மழையையோ பொருட்படுத்தவில்லை.

அவனைவிட்டு இன்பம், நிம்மதி தூக்கம் எல்லாமே ஓடிவிட்டன போல் தோன்றின. தன்னந்தனியே துன்ப அரக்கனின் கொடிய கரங்களில் சிக்கி, கூப்பாடுபோட்டுக்கொண்டிருந்தான். அவனின் அந்தக் கூக்குரலுக்கு உலகமே செவிசாய்க்காதது போலப்பட்டது. தலையைக் கரங்களால் இறுகப்பற்றிக் கொண்டான்.

(தொடரும்)

நாங்களென்றால் பாவிப்பது

பொன்ட்ஸ டிரீம்பிளவர் டால்கம் பௌடர்தான்!

உலகமெங்கும் ஆயிரக்கணக்கான பெண்கள் பாவிப்பது பொன்ட்ஸ டிரீம்பிளவர் டால்கம் பௌடர்; ஏனெனில் அது பட்டுப்போல் மிருதுவான, நேர்த்தியான டால்கம் பௌடர். வாடாத புத்துணர்ச்சியூட்டி உங்களை நறுமணம் கமழ்ந்திருக்கச்செய்கிறது.

தான் பாவிப்பது உலகப்பிரசித்திப்பெற்ற பொன்ட்ஸ டிரீம்பிளவர் டால்கம் பௌடர்தான் என்று சொல்வதில் ஒவ்வொரு பெண்ணும் பெருமையடைகிறாள்.

அழகு பெண்மணிகள் பாவிப்பது, பொன்ட்ஸ் டிரீம்பிளவர் டால்கம் பௌடர்



(7ம் பக்கத் தொடர்ச்சி)

## சிறுகதை

கால வாழ்வைப்பற்றி...'' நாம் வாழப்போகும் புது உலகத்தைப்பற்றி...''

நான் என்னை மறந்து கேட்டுக்கொண்டிருந்தேன்.

''நாம்கண்ட கனவுகள் வெறும் கனவாகப் போகக்கூடாது. கற்பனைகள் பொய்யாகக் கூடாது— அந்தக் கனவுகளை, கற்பனைகளை எல்லாம் இன்றே... இந்தப்பொழுதே வாழ்ந்து விடுவோம்... எதிர் காலத்தில் உலகத்தில் வாழும் வாழ்கை முழுவதையும் இந்தப் பொழுதே நெஞ்சத்தால் வாழ்ந்துவிடுவோம்...''

எனக்கு உடலும் உள்ளமும் புல்லரித்தன. நெஞ்சத்தை என்னவோ செய்தது. அவள் கனவின் மயக்கம் கண்களில் பரவ பேசிக் கொண்டே இருந்தாள். கேட்கக்கேட்க வாழ்வில் ஓர் வெறியும், கற்பனையும் என்னுள் மலர்ந்தன. அவைகளில் எல்லாம் ஏதோ ஓர் வேதனையின் சாயல் படிந்திருப்பதை என்னால் உணராமல் இருக்கமுடியவில்லை.

நாங்கள் கண்ட கனவுகளுக்கும் கற்பனைகளுக்கும் பின்னால் பெரும் பயங்கரம் கவிந்திருப்பதை உணர்ந்து நெஞ்சம் கலங்கினேன்.

"நம் கடைசிச் சந்திப்பு இதுதான்... இன்னும் சில நாளில்...''

கூறமுடியாமல் சில கணம் தவித்தாள்.

''இன்னொருவனின் மனைவியாகப்போகிறேன்...''

என்னுள் அழகாக மலர்ந்திருந்த கனவுகள், கற்பனைகள் எல்லாம் அவளின் அந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் இருந்த இடம் தெரியாமல் போயின. நெஞ்சம் கள்ளி ஆற்றின் மணல் வெளியைப் போல் பெருவெளியாய் வரண்டது. உலகை மறந்தேன்; என்னையே நான் மறந்தேன்.

''பூரணி...''

கற்பனைகளின் அழகெலாம், கனவின் வடிவெலாம் அந்த வார்த்தைகளில் அழிந்துபோயின. அந்த நேரத்தில் மிகுந்து நின்றது என் உடல்மட்டும் தான்.

அவள் வேதனையோடு, துயரத்தை அடக்க முடியாமல் அழும் என்னைப்பார்த்து கலங்கிய கண்கள்மலரச் சிரித்தாள். அது எனக்குச் சற்று இதமாக இருந்தது. ஆதவன் முன் அகலும் பனியாய் நான் அவள் பார்வையில், பூவாய் மலரும் புன்னகையின் முன் எல்லாவற்றையுமே இழந்து பொறுமையானேன்.

விடி நிலவு 'பட்டுப்' போய்க்கொண்டிருந்தது.

''நாம் கண்டகற்பனையும், கனவும் உலகில் நிலைத்து நிற்கும். உள்ளத்தால் இணைந்த நமது வாழ்க்கை என்றும் அழியாது...''

அவள் கடைசியாகச் செல்லிச் சென்றது இது தான். நான் என் உயிரை, உணர்வை, உள்ளத்தை அவள் பின் ஓடவிட்டு, அவள் அந்த மணல் வெளியில் போவதைச் சிலையாய்ப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

பார்வை திரும்பிய போது தூரத்தில் ஒரு நட்சத்திரம் உதிர்ந்து விழுவதைக் கண்டேன்.

என்னுள் ஏதோ ஒரு வேகம், வெறிமூண்டது. அதனை எடுத்து வானத்தில் ஒட்டவைக்கவேண்டும் எனும் உணர்வு தோன்றியது.

எழுந்து அதனைநோக்கி ஓடினேன்.

இது நடந்து எத்தனை நாட்கள் சென்றதோ எனக்குத்தெரியாது. ஒவ்வொரு இரவையும் பகலையும் அவள் வீட்டில் இருந்துகேட்கும் மங்கல மேளத்தின் ஒலிக்காகக் காத்திருந்தேன்.

நான்எதிர்பார்த்தது நடந்தது.

ஏங்கிஇருந்தது,கேட்டது. மங்களம் பொங்கவில்லை; மரண ஓலம் கேட்டது...

ஓடினேன்...

அவள் வாடாத கனவுகளும், கற்பனைகளும் உள்ளத்தில் மலர, முகத்தில் ஆனந்தம் மலர்ந்து ஒளி வீச, அமைதியாக மீளா உறக்கத்தில் ஆழ்ந்திருந்தாள்.

அமாவாசை இருட்டு.

கள்ளி ஆற்றின்கரையில் அலைகள் என் கால்களைத் தழுவிச்செல்ல நான். எல்லாவற்றையுமே இழந்து தனியனாய் நிற்கிறேன். அவள் என்னுள் விதைத்த கற்பனைகளும் மலரவைத்த கனவுகளும் துணை நிற்கின்றன.

என் எதிரே கள்ளி ஆற்றின் மறுகரையில் மண்டிக்கிடக்கும் ஈச்சம்புதர்களுக்கு நடுவே சடைத்து நிற்கும் புளியின் அடியில், அடுக்கிய பச்சைக் கட்டைகளினிடையே, பெருவெறி கொண்டு தழுவும் நெருப்பில் அழியாத கனவும், கற்பனையும் படைத்த அவள் அழிந்து கொண்டிருக்கிறாள்.

நான் பார்த்துக்கொண்டு நிற்கிறேன்.

அங்கே பற்றி எரியும் நெருப்பு என்னையே சுட்டெரிப்பதாக உணர்கிறேன். சுடலையில் கொழுந்துவிட்டெரியும் நெருப்பிடையே அவள் எழுந்து நின்று அழைக்கிறாள். பற்றிய நெருப்பின் நடுவிலும் அவள் நெஞ்சில் மலர்ந்த கனவும் கற்பனையும் வாடாமல் ஒளி வீசுகின்றன.

அவள் அழைக்கிறாள்.

கள்ளி ஆற்றின் பெரு வெளியில் நடுங்க வைக்கும் இருட்டில் அவள் என்னை அழைக்கும் குரல் அலைவதாக நெஞ்சம் உணர்கிறது.

என்னை நோக்கி அணைக்கக் கைநீட்டி நிற்கும் அவளிடத்தில் செல்ல, அணைத்து மகிழ, கனவும் கற்பனையும் காண, ஏதோ ஓர் சக்தி என்னைப் பிடித்து உந்தித் தள்ளுகிறது

நான் நீரில் இறங்கி நடக்கிறேன். நடக்க நடக்க நீர் நீண்டு கொண்டே இருக்கிறது.

—என்னைச் சுற்றிக் கேட்பதென்ன பூரணியின்குரலா... என்னைக்கட்டி அணைப்பதென்ன அவளின்கைகளா... அவள்... என்னுடைய பூரணி...? வந்துவிட்டேன்... அவளிடம் வந்துவிட்டேன்.

''இனியாவது நாங்கள் கண்ட கனவும் கற்பனையும் உலகில் நிலைத்து நிற்குமா...?''

(யாவும் கற்பனை)

இலங்கையில் ஒலிபரப்பு சேவை: 4

# ஆங்கிலம் அரசோச்சிய நாட்கள்

— வி. எஸ். ரி. —

ஒரே அலைவரிசையில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டு வந்த காலத்தில் 'மொழிப் பிரச்னைகள்' பல எழுந்தன. இலங்கை இன்னும் சுதந்திரம் பெறவில்லையாதலினால் ஆங்கிலம் தான் இறுமாப்புடன் இருந்தது, அதுதான் செல்லப் பிள்ளை, அதற்குத்தான் மௌசு. ஒரு நாளில் பத்து மணி நேரம் ஒலிபரப்பு இருந்தால் ஆங்கிலம் அதில் சரி அரைவாசிக்கு மேல் அபகரித்துக் கொள்ளும். பெரும்பான்மை மொழி என்ற காரணத்தால் சிங்களத்துக்கு இரண்டாவது இடமும் தமிழுக்கு கடைசி ஸ்தானமும் கிடைக்கும். அத்துடன் பெரும்பாலான மக்கள் ஆறுதலாக உட்கார்ந்து வானொலி நிகழ்ச்சிகளை கேட்கக் கூடிய உச்ச நிலைகளையும் ஆங்கிலமே ஆகர்ஷித்துக் கொள்ளும். காலை 6 மணி தொடக்கம் 8 மணி வரை, மத்தியானம் 12 முதல் 1 மணி வரை, மாலை 7 மணி முதல் 9 வணிவரை இவை தான் உச்ச வேளை ஒலிபரப்பு நேரங்கள். இந் நேரங்களில் தான் அதிகமானவர்கள் றேடியோ கேட்பார்கள்.

ஆங்கில றேடியோ கலைஞர்களுக்கு சலுகைகளும் சன்மானமும் கூடுதலாக வழங்கப்படும். கப்பலில் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் நாலாந்தர ஆங்கிலப் பாடகர் ஒருவர் கொழும்பில் ஒருநாள் தங்கியிருக்கப் போகிறார் என்று கேள்விப்பட்டால் போதும் எல்லோருக்கும் சன்னிபிடித்துவிடும்! நிலைய அதிகாரியே நேரில் கப்பலுக்குப் போய் அவர் கேட்கும் சலார் எதுவோ அதைக் கொடுத்து நிலையத்துக்கு அழைத்துவந்துவிடுவார். இவர் ஒலிபரப்புவதற்கு நேரம் வேண்டுமல்லவா? வெட்டு தமிழ் நிகழ்ச்சியை' என்று உத்தரவு பிறக்கும். அந்த நேரத்தில் கச்சேரி செய்ய விருந்த தமிழ் கலைஞருக்கு தந்தி பறக்கும்- உம்முடைய நிகழ்ச்சி ,கான்சல்' என்று. தமிழுக்கு நேர்ந்த இந்த அவமானத்தை நினைந்துநினைந்து தமிழ் அறிவிப்பாளருக்கு இரத்தம்கொதிக்கும். அவர் என்ன செய்ய முடியும்?

இரண்டு ஆங்கில நிகழ்ச்சிகளுக் கிடையில் ஒரு தமிழ் அல்லது சிங்கள நிகழ்ச்சி வந்துவிட்டால் அந்த நிகழ்ச்சியை தலைப்பக்கத்தாலும் வால்பக்கத்தாலும் கிள்ளுவதற்கு ஆங்கில அறிவிப்பாளர் சற்றும் தயங்கமாட்டார். தமிழ், சிங்கள நேயர்களுக்கு இயற்றப்படும் இந்த விதமான துரோகங்களைக் கண்டு அவர்களுடைய பிரதிநிதியான அறிவிப்பாளர் மனம் புழுங்கி கறுவிக் கொள்வார், அவருடைய முறைப்பாடுகள் மேலதிகாரிகளின்செவியில்ஏறமாட்டா, எருமை மாட்டின் முதுகில் மழைத் தண்ணீர் விழுந்தது போலத்தான்!

யுத்தம் இலங்கையை அணுகி வந்த போது டொரிங்டன் சதுக்கத்தில் இராணுவ விமானத் தளம் ஒன்று அமைக்கப்பட்டதும், ஒலிபரப்பு நிலையம் பொரளையிலுள்ள ஒரு வீட்டில் தஞ்சம் புகுந்தது. அங்குள்ள ஒரு பெரிய அறையில் ஒரு பெரிய ஸ்ருடியோவும் ஒரு சின்ன அறையில் சின்ன ஸ்ருடியோவும் அமைக்கப்பட்டன. பெரிய ஸ்ருடியோவில் பலர் பங்கு பற்றக் கூடிய இசைக் கச்சேரிகளும் நாடகங்களும் நடைபெறும். சிறியதில் பேச்சுகளும் சம்பாஷணைகளும் நடக்கும். இரண்டு ஸ்ருடியோவிலும் அறிவிப்பாளருக்கென ஒரு மேசையும் மைக்கும், கலைஞர்களுக்கு வேறொரு மைக்கும் இருக்கும். இந்த மைக் மூன்று ஆடுகால்களில் ஒரு துலா தொங்குவது போல இருக்கும். நுனித் துலாவில் மைக் இருக்கும். நிகழ்ச்சிகளின் தன்மைக் கேற்ப இந்த துலாவை ஸ்ருடியோவின் எந்த மூலைக்கும் கொண்டு செல்லக் கூடியதாக ஆடு கால்களுக்கு சில்லுகள் பொருத்தப் பட்டிருக்கும்.

கலைஞர் மைக்கிலிருந்து புறப்படும் ஒரு நீண்ட ரப்பர் குழாய் அறிவிப்பாளர் மேசையில் பொருந்தியிருக்கிறது. குழாயை இழுத்து தொடர்பை அறுத்து விட்டால் அந்தமைக் 'செத்துப் போகும்' குழாயை மேசையில் பொருத்த மறந்து போய் ஒரு நிகழ்ச்சியை ஆரம்பித்து விட்டால் ஒன்றுமே வெளியில் போகாது. உடனே பக்கத்து அறையிலுள்ள என்ஜினியர் சமிக்ஞைகாட்டி எச்சரிக்கை செய்வார், மறுபடியும் குழாயை சரியாகப் பொருத்தி நிகழ்ச்சியை ஆரம்பிக்கவேண்டும், அறிவிப்பாளர் நிகழ்ச்சியை அறிவித்து விட்டு தன்னுடையமைக்கை மறந்து போய் திறந்துவிட்டால் கலைஞர் (மைக்கின்) மூலம் பேசுபவர் கிணற்றுக்குள்ளிருந்து பேசுவதுபோலிருக்கும். இப்பொழுது அறிவிப்பாளருக்கு ஒரு தனி அறையும் கலைஞருக்கு வேறு அறையும் என்ஜினியருக்கு வேறு அறையும் பத்துக்கு மேற்பட்ட ஸ்ருடியோக்களும் இருப்பதால் இந்தவிதமான குழப்பங்கள் ஏற்படுவதில்லை.

ஒரு நாள் ஒரு பிரக்கிராசியார் தமது பேச்சை ஒலிபரப்ப வந்தார். அறிவிப்பாளர் அவரை ஸ்ருடியோவுக்குள்அழைத்துக்கொண்டு போய், அவருடைய குரல், மைக்குக்கும் அவருக்குமிடையே இருக்க வேண்டிய தூரம் எல்லாவற்றையும் சரி பிழை பார்த்து, ஓர் ஒத்திகையும் நடத்தி, பேச்சாளரை மைக்குக்கு முன் இருத்தி விட்டு, மைக்குக்கு புதியவராதலால் 'நேரம் வந்ததும் சிவப்பு லைட் எரியும், அறிவித்து முடிந்தவுடனே நீங்கள் பேச ஆரம்பிக்கலாம்' என்று சொல்லிக்கொடுத்து விட்டு குறித்த நேரத்தில் நிகழ்ச்சியை ஆரம்பிக்கும்படி கையால் சமிக்ஞை காட்டினார். பேச்சாளர் உடனே நாற்காலியைப் பின்னால் தள்ளிவிட்டு ஒரு கனைப்புக் கனைத்து கொண்டு எழுந்து நின்று பிரசங்கம் செய்யத் தொடங்கி விட்டார்! நாற்காலி தள்ளப்படும் சத்தமும் கனைப்பும் ஆகாயத்தில்சென்றன. பேச்சு போகவில்லை! அறிவிப்பாளர் சட்டென்று மைக் இரண்டையும் மூடி விட்டு உட்கார்ந்து கொண்டு தான் பேச வேண்டும், எழுந்து நிற்கப்படாது' என்று எச்சரிக்கை செய்து விட்டு மீண்டும் ஒரு முறை நிகழ்ச்சியை புதிதாக ஆரம்பித்தார். இந்தக் குழப்பத்தில் இரண்டு நிமிடங்கள் போய்விட்ட படியால் குறிப்பிட்ட நேரத்தையும்தாண்டி பேச்சு போய்க் கொண்டிருந்தது. இதற் கிடையில் அடுத்த நிகழ்ச்சிக்கு வேறொரு அறிவிப்பாளரும் வந்து விட்டார். உடனே ஒரு வசனத்தின் முடிவில் பேச்சைத் துண்டித்து விட்டு பேச்சாளரை வாய் திறக்காதிருக்கும்படி சமிக்ஞை காட்டி விட்டு அறிவிப்பாளர் நிகழ்ச்சி முடிவை அறிவித்தார்.

(தொடரும்)

# ஆட வேண்டும் பாட வேண்டும்

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' இச் செல்வம் எல்லாருக்கும் கிடைப்பது மிக அருமை. கோடி செப்பொன் குவித்து வைத்திருக்கும் பல செல்வந்தர்கள் தம் செல்வத்தை அநுபவிக்கமுடியாது நோயென்னும் கொடிய அரக்கனுக்கு இரையாவதைக் காண்கிறோம் பல ஏழைகள் வறுமையினாலே நோய்க் கிரையாகின்றார்கள். செல்வர் ஏழை என்ற பாகுபாடில்லாது எல்லோரையும் பீடித்து வருத்தும் நோய்களை ஒழிக்க இலங்கையில் வருடா வருடம் சுகாதார விழா கொண்டாடப்படுகிறது. இவ்வருடமும் சுகாதாரவிழா வழமை போல் கொண்டாடப்பட்டது. பிரசாரங்களும், பேச்சுக்களும்,களியாட்டங்களும் விழாவில் இடம்பெற்றன.

காரைநகர் நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற சுகாதார விழாவில் இடம் பெற்ற சில நிகழ்ச்சிகள் குறிப்பிடத்தக்கவை. இளைப்பாறிய ஆசிரியர் திரு. கொஸ்மொஸ் டபிள்யு. டி. அல்வினஸ் அவர்கள் பட்டினி ஒழிப்பு இயக்கம் வெற்றிபெறச் சில வகைகளை எடுத்துக் கூறினார். பட்டினிக்கும் நோய்க்கும் காரணம் அறியாமையும் மேல்நாட்டு மோகமும் என்பதைத்தெளிவாக விளக்கினார். கையிலே வெண்ணையை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவது போல் மக்கள் வீட்டிலேயே சத்துள்ள ஆரோக்கிய உணவுகள் இருக்க அவ்விளைவைப்பெருக்கி அவற்றை ஆக்கி உண்ணாது பெரும் விலைகொடுத்து நாகரிகமாகச் சில உணவுகளை வாங்கி உண்டு ஆரோக்கிய மற்றவர்களாக வாழும் விதத்தை அவர் அழகாக எடுத்து நயம்பட உரைத்தார்.

உடல் ஆரோக்கியத்திற்கு விளையாட்டுப் பயிற்சிகளும் இன்றியமையாதனவாகும். நம் முன்னோர்கள் பாடசாலைகளில் முன்பு கும்மி, கோலாட்டம் போன்ற தமிழக விளையாட்டுக்களை பிள்ளைகட்குக் கற்றுக் கொடுத்தனர். இவ்விளையாட்டுக்கள் தமிழரது புது வருடம் தீபாவளி போன்ற விசேஷ நாட்களில் வீடு வீடாக பிள்ளைகளால் விளையாடிக் காண்பிக்கப்பட்டது. அப்பொழுது பெற்றோரும் உற்றோரும் பெருவகை எய்துவர். தமிழ் மக்களின் மேல்நாட்டு மோகம் இவ்விளையாட்டுக்களை மெல்ல மெல்லக் குறைத்து அறவே ஒழிக்கும் நிலைக்கு கொண்டுவந்தது ஒரு நாட்டின் பண்பாடு கலாச்சாரத்தை எடுத்துக்காட்டும் சிறப்புகளில் அந்நாட்டு விளையாட்டுக்களும் ஒன்றாகும் என்பதை மக்கள் உணரவேண்டும். இச்சுகாதார விழாவில் இலங்கைத் தமிழ்மக்களின் கும்மி, கோலாட்டம், கிராமிய நடனம் ஆகிய வற்றிற்கு புத்துயிர் அளிக்கப்பட்டு, விழாவில் அவை முக்கிய இடம் பெற்றன. மலையாள மக்கள் கதகளி நடனத்தையும், சிங்கள மக்கள் கண்டிய நடனத்தையும் தங்கள் பண்பாடு கலாச்சாரத்தை வளர்க்கப்போற்றி வருதல் போல் தமிழ்மக்களும் தங்களது கும்மி, கோலாட்டம், கிராமிய நடனங்களுக்கு முக்கியத்துவம் அளித்து போற்றி வளர்க்கவேண்டும். தமிழ்ப்பேரறிஞர்கள் தங்கள் இலக்கியங்களில் இவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து போற்றியதை சிலப்பதிகாரம் திருவாசகம் பாரதியார் பாடல்கள் போன்றவற்றிற் காண்கிறோம். இக்கலைகளை நாம் வளம்பெறச் செய்து தமிழர் நாகரிகத்தையும் வளம் பெறச் செய்வோம்.

"இளம் பூரணி''

## நன்றி நவிற்சி

சென்ற 16-6-65 புதன் இழமை எனது மனைவி திரு நிறை செல்வி மீனாட்சி அம்மை பரலோக பிராப்தி யடைந்துவிட்டார், இது பற்றி அன்பர்கள் ஆறுத லடையும்படி கடித மூலமும் தந்திமூலமாகவும் தெரிவித் தனர். பலர் சமுகந்தந்து தேற்றரவு கூறினர். அவர் கள் யாவருக்கும் எனது மன மார்ந்தநன்றியையும் வணக் கத்தையும் இதனால் தெரி வித் துக்கொள்ளுகின்றேன். வ. மு. இரத்தினேஸ்வரன், நீராவியடி. 609

### விற்பனைக்கு

கலப்பற்ற அல்சேஷன் நாய்க்குட்டிகள் (Black and Silver) விற்பனைக்குண்டு. க, நடேசன், 15, மலர்மகள் வீதி, அரியாலை. 611

## கல்வளைப் பெருவிழா

5-ம் பக்கத் தொடர்ச்சி

னர். இதனால் சைவம், செந்தமிழ் என்பன பாது காக்கப்படுகின்றன. இத் தினம்இன்று ஆகும். ஆண்டு தோறும் பல அடியார்கள் இவ்வைபவங்களில் பங்கு கொண்டு இறைவனின் திரு வருளைப் பெறுகின்றனர்.

கன்னலும் செந்நெலும்
தெங்கு மல்கும்
எந்நரும் செல்வரென
இருந்தவர்கள் மலியும்
இன்னலினி இல்லையென
இன்தமிழை நல்கும்
மின்னலும் பொன்னரும்
ஈந்தெமை ஆள்வான்
சொன்னசொலில் சென்னி
வளை கல்வளையெம்மவரே.

REGAL - JAFFNA
NOW SHOWING
Howard Keel
in
ARMOURED COMMAND
(War Film)

# தாலிக்கொடி மீதான பிரயாண கட்டுப்பாடு

## அடுத்த பார்லிமெண்டரி குழு கூட்டத்தில் ஆராயப்படும்

கொழும்பு, சனி

தாலி அணிந்து இந்தியா வுக்குப் பிரயாணம் செய்யும் பெண்களை எதிர்நோக்கி யுள்ள 'தாலிக்கொடிமீதான கட்டுப்பாடுகள்' குறித்து அரசாங்க பார்லிமென்டரிக் குழுவின் அடுத்த கூட்டத் தில் ஆராயப்படவிருக்கி றது தாலிக்கொடிகள் மீதுள்ள கட்டுப்பாடுகளை தளர்த்துமாறு இக்கூட்டத் தில் உடுவில் எம். பி. திரு. வி. தருமலிங்கம் கோரவிருக் கிருர்.

இலங்கையிலிருந்து இந்தி யாவுக்குப் பிரயாணம் செய் யும் பெண்கள் அணிந்திருக் கும் தாலிக்கொடிகள், குறிப் பிட்ட ஒரு அளவு பெறும திக்குட்பட்டதாகவிருக்க வேண்டும் என்பதும் கூடிய பெறுமதியுள்ள தாலிக் கொடிகளை அணிந்திருந் தால் அதற்கு விசேஷ அனு மதி பெறவேண்டும் என்ப தும் இப்பொழுது ஒரு நிபந் தனையாக இருந்துவருகிறது.

''திருமணமான தமிழ்ப் பெண்கள் தாங்கள் அணியும் தாலியைப் புனிதமாகக் கொள்கிருர்கள். சுபவேளை யின்போது அணியப்படும் தாலியை சில கட்டுப்பாடுக ளுக்காகக் கழற்றச்செய்வது வரவேற்கத்தக்கதோர்செய லல்ல, இப்படியான கட்டுப் பாடுகளைத் தளர்த்தி தமிழ்ப் பெண்களின் மரபுக்கு மாருக வுள்ள இவ்விஷயத்தில் அர சாங்கம் உடனடியாக நடவ டிக்கை எடுக்கவேண்டும்'' என்று திரு. தருமலிங்கம் கோரவிருக்கிருர்.

## மாணிக்கவாசகர் குருபூசை

கோண்டாவில், சனி

கொக்குவில்மேற்கு மணிய காடு சுப்பிரமணிய கோவி லில், மாணிக்கவாசகர் குரு பூசை சிறப்பாகக் கொண் டாடப்பட்டது.

○

கொக்குவில் இந்துக் கல் லூரியில் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை மாண வர்களினலும், ஆசிரியர் களினலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சைவப் பெரியார்கள் பலர் சொற்பொழிவு நிகழ்த்தி னர்.

## மின்சாரத்தால்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தடவை மேயருக்கு கூறி னேன். பொதுவாக கடலோ ரப்பகுதிகளில் மின்சாரம் படுமோசமாக இருக்கிறது. இந்த இடங்களை மரண விசாரணை அதிகாரி நேரில் பார்ப்பார்வையிடு வது நல்லது.விபத்து நடந்த இடத்தில் இரண்டு கிழ மைக்கு முன் மின்சார வயர்ள் திருத்தப்பட்டதா கக்கூறப்பட்டது. அப்படியா னல் அதே இடத்தில் திரும் பவும் பிழையேற்பட்டிருந் தால் ஏதோ மோசடி நடந் திருக்கவேண்டும். அரசாங்க மின்சார இன்ஜினியர் நேரில் பார்வையிடுவது நல்லது. யாழ்ப்பாணம் மின்சார இணைப்பு சுப்பிரிண்டன் திரு. மகாலிங்கமும் சாட்சி மளித்தார்.

விபத்தினலேற்பட்ட மர ணமென தீர்ப்பளித்துமரண விசாரணை அதிகாரி கூறி யதாவது; யாழ்ப்பாணத்தில மின்சார நிலைமை மிகவும் கேவலமாக இருப்பதாக மூன்று மாதத்திற்கு முன் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் மின்சாரத்தால தாக்குண்டு மரணமான போது தெரிவித்தேன், அரசாங்கத்திற்கும் புகார் செய்தேன். இன்னுமொரு புயல யாழ்ப்பாணத்தில ஏற்படுமானல, பலர் மரண மடையக் கூடிய நிலை ஏற் படும். இப்படியான நகரத் தில தகுதிவாய்ந்த மின்சார இன்ஜினியர் இல்லாதது வியப்புக்குரியது. இந்தவிஷ யத்தைப்பற்றி ஸ்தலஸ்தா பன மந்திரி உடனடியாக விசாரணை செய்யவேண்டு மெனக் கேட்டுக்கொள்கி றேன். மூன்று மாதத்திற்கு முன் இதே இடத்தில திருத் தப்பட்டது சம்பந்தமாக ஆராய்ந்து ஓர் அறிக்கை சமர்ப்பிக்குமாறு மாநகர சபைக் கமிஷனரைக் கேட் டுக் கொள்கிறேன்.

## ஸ்ரீமாவுக்கு இலவச சீட்டு

### ஹெல்சிங்கி சென்று திரும்ப!

கொழும்பு, சனி

எதிர்க்கட்சித் தலைவர் திருமதிஸ்ரீமாவோ பண்டார நாயக்கா ஹெல்சிங்கிக்கு இலவசமாக சென்று திரும்ப பிரயாண சீட்டு பதிவுசெய் யப்பட்டிருக்கிறது. இந்தச் சீட்டு வியன்னவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அங்கு நடைபெறவிருக் கும் மகாநாடொன்றில் கலந்துகொள்ள திருமதி ஸ்ரீமாவோ செல்வார் என எதிர்பார்க்கப் படுகிறது.

## தமிழ் பண்டித, வித்வான்களுக்கு உரியவேதனம்

பம்பலப்பிட்டி, சனி

தமிழ் வித்வான்களுக் கும் பண்டிதர்களுக்கும் சிங்கள பண்டித, வித்வான் களுக்கு வழங்கப்படும் வேதனம் (ஆங்கில பட்ட தாரிகளுக்கு வழங்கப்படும் வேதனம்) வழங்குவதற்கு தாம் நடவடிக்கை எடுப்ப தாக கலவி மந்திரி இரிய கொலை தமிழரசுக்கட்சி எம். பி. க்களிடம் உறுதி யளித்துள்ளதாக அறியப் படுகிறது.

தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செலவ நாயகம் தலைமையில எம். பி. க்கள் மந்திரியை இது சம்பந்தமாகப் பேட்டி கண்டபோதே அவர்மேற் கண்டவாறு உறுதி தெரிவித் தார்.

இவ்விதபட்டம் பெற்ற வர்களை மேலும் நியமிப்ப திலலையென மந்திரி தெரி வித்ததாகவும் அறியப்படு கிறது,

## "முத்தமிழால் வையாவரையும் வாழவைத்த தமிழ்க்கடவுள்"

உடுப்பிட்டி, சனி

''ஆதியும் பகவனும் ஈன் றெடுத்த பொற்சிலைதான் ஔவை. பகவனின் கட்ட ளைப்படி பச்சிளங்குழவியான ஔவையைத் தனியே விட்டு விட்டு ஆருத்துயருடன் ஆதி பின்செல்ல, 'இட்ட முடன் என்தலையில் இன்ன படி என்றெழுதிவிட்ட சிவ னும் செத்துவிட்டானே?' என்று பிஞ்சிலே கவிபாடிய தெய்வக்குழந்தைஔவை.'' இவ்வாறு துன்னலை நுணு வில் பிள்ளையார் கோவிலில் 'விநாயகர் அருள் பெற்ற காரிகை' என்னும் விடயம் பற்றிச் சொற்பொழிவாற் றிய திரு. கணேசசுந்தரம் கூறினர். அவர் மேலும் கூறியதாவது:-

''ஔவையின் கர்வத்தை அடக்கவே முருகப்பெரு மான் நாவற்கனிகொடுத்து விளையாடினன். ஔவைப் பிராட்டி வாயிலாக முருகன் பல கருத்துக்களை எமக்குத் தெரிவித்துள்ளான். முருகு என்றால் அழகு, இனிமை என்று பொருள்படும். தமி ழிலே முருகனுக்கு அளவு கடந்த பிரியம்.

## கருதினால் ஒரே...:

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தவர்களும் உழைக்கவேண் டும். எனக்களித்தவரவேற் பிற்கு நன்றியைத்தெரிவித் துக்கொள்கிறேன்.

அதி மேற்றி ராணியாரு டன் யாழ்ப்பாணம் மேற்றி ராணியார் எமிலியானுஸ் பிள்ளை, அதிமேற்றி ராணி யாரின் காரியதரிசி ஆகி யோர் இங்கு வந்தடைந்த பொழுது அவர்களுக்கு சிறப் பான வரவேற்பு அளிக்கப் பட்டது.

நேற்று மாலை யாழ். மாநகரசபையில் அளிக்கப் பட்ட வரவேற்பில் பல இனத்தையும் சார்ந்த பெரும் திரளான மக்கள் கலந்துகொண்டனர். யாழ். மாநகரசபை அதிமேற்றிரா ணியாருக்கு தேநீர் விருந்த ளித்தது. இன்றும் நாளையும் பல வரவேற்புகள் அளிக்கப் படவிருக்கின்றன.

### இன்றைய நிகழ்ச்சி

இன்று காலை 7-30-க்கு ஆசனக்கோவிலில் திவ்ய பூசை நிறைவேற்றும் வைபவத்தில் அதிமேற்றி ராணியார் கலந்துகொள் வார்.

மாலை 7-30-க்கு சம்பத் தரிசியார் கல்லூரி மைதா னத்தில் பாப்பரசர் தினக் கொண்டாட்டத்திற்குத் தலைமை தாங்குவார். இத னைத் தொடர்ந்து மேற்றி ராசத்தின்பொது லரவேற்பு நடைபெறும். இதன் பின் னர் சற்பிரசாத ஆசீர் வாதம் இடம்பெறும்.

## அமெரிக்க சுதந்திர தினச் செய்தி

கொழும்பு, ஞாயிறு

இன்று ஞாயிற்றுக்கிழமை 189-வது சுதந்திர தினமா கும். இதையொட்டி அமெ ரிக்க ஸ்தானிகர் திரு. சிசில் பி. லயன் விடுத்த செய்தி வருமாறு:-

"ஜுலை 4-ல் அமெரிக்கா வின் 189-வது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் பொழுது, எமது சுதந்திரம் ஐக்கிய நாடுகள் சபையில் மட்டுமல்ல, உலகின் ஏனைய பாகங்களிலும், மனித சமு தாயத்திற்குப் பணிசெய்யக் காத்திருக்கிற தென்பதற்கு நன்றியறிதல் உடையவர்க ளாக இருக்கிறோம், சுதந்தி ரத்தைப் பாதுகாக்க விழிப் புத் தன்மை, வீரம், தியா கம் ஆதியன அத்தியாவசிய மாகும்.

''190-வதுசுதந்திரஆண்டு அமெரிக்க அரசாங்கத்திற்கு விஞ்ஞானம், நீதி உட்பட, 'மனிதர் அனைவரும் சம மாகச் சிருஷ்டிக்கப்பட்டிருக் கின்றனர்' என்ற அடிப் படையில் மென்மேலும் அதிக வாய்ப்புகள் வழங்குவ தாக.''

## வரிப் பிரச்னை

உடுப்பிட்டி, சனி

நெல்லியடி பட்டினசபை யில் இரண்டு வரியிறுப்போர் சங்கங்கள் தோன்றியுள் ளன. சபை குறிப்பிட்டுள்ள வரிகள் அதிகரித்துவிட்டன என்றும் தோட்ட, வயல் நிலங்களுக்கு வரிப்பணம் அறவிடக்கூடாது என்று ஒரு சாராரும்; குறிப்பிட்ட ஒரு ஸ்தாபனத்திலிருந்து வர வேண்டிய வரி அறவிடக் கூடாது என்று பட்டின சபைக் கூட்டத்தில் தீர்மா னித்தபடியால் மற்ற ஸ்தா பனங்களும் பொதுமக்களும் ஏன் வரி கொடுக்கவேண்டும் என்று இன்னொரு சாராரும் வாதாடி வருகின்றனர்.

கட்டைவேலி கிராமசபை யாக இருந்து பட்டினசபை யாக மாற்றப்பட்டுள்ள நெல்லியடி பட்டினசபை இதற்கு முன்னர் வரிகள் அறவிடவில்லை. மின்சாரம், குழாய்நீர் வசதிகள், பாதைச் சீரமைப்புகள் முத லிய வசதிகளும் வேண்டும். ஆனல் வரி மாத்திரம் அற விடக் கூடாது என்ற பலரின் அபிப்பிராயத்தையிட்டு தலைவர் திரு. வே. அ. பொன் னையா வருத்தம் தெரிவித் தார்.

பொதுமக்களுக்கிடையில் பிரச்னைகள் ஏற்பட்டால் நெல்லியடிப் பட்டின சபை மீண்டும் கட்டைவேலிக் கிராமசபையாக மாறி விடுமோ என்று பலர் அஞ்சு கிருர்கள்.

## ஆனி உத்தரம்

நல்லூர் சிவன் கோவிலில் நாளை அதிகாலை ஆனி உத் தரத்தை முன்னிட்டு சங் காபிஷேகமும் தரிசனமும். உற்சவமும் நடைபெறும்,

வண்ணை சிவன்கோவிலி லும் ஆனி உத்தர உற்சவம் நடைபெறும்.

## தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், சனி

சங்கானை அரசடி வயிரவ கோவில் தேர்த்திருவிழா நாளை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். மறுநாள் திங் கட்கிழமை உதயத்தின் போது நடராச அபிஷேகம் நடைபெறும்.

• • •

சுழிபுரம் ஞாயிறு

சுழிபுரம் பறுளை விநாய கர் கோவிலதேர்த் திருவிழா இன்று நடைபெறும். நாளை திருவடி நிலையில தீர்த்தோற் சவம் நடைபெறும்.

மகத்தான 2வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பலாஸ் (வெள்ளவத்தை) நவா (குமடனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜிதா (ஹட்டன்)

என். டி, ராமராவ், அஞ்சலிதேவி,
ஜெமினி கணேசன், எம். ஆர். ராதா,
மாஸ்டர் முரளி, பேபி உமா, நாகையா
மற்றும் பலர் நடித்த




லவகுசா

சிரிக்கும் ஒரு பொன்னேடு—லவகுசா—
படித்தவர்கள் ஒலகோடி! கேட்டவர்கள் பலகோடி!
இதோ சினிமாஸ்திரைகளில் பார்த் மகிழுங்கள்!

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத் தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜுலை மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டுள்ளது.